தாவோ

தெளிவாக வாழும் கலை

ெச. இலக்குவன்

தாவோ

தெளிவாக வாழும் கலை

ச.இலக்குவன்

முதற்பதிப்பு : 2007

தாள் : 11.6 கி.கி.
வெள்ளைத்தாள்

எழுத்து : 12 புள்ளி

அளவு : 1 x 8 கிரவுன்

விலை : ரூ. 35/-

தாவோ

தெளிவாக வாழும் கலை

செ.இலக்குவன் M.A.,(Psy), PGDBA., DCL.,
உளவியல் நிபுணர்

பாபு பதிப்பகம்
(நூல் வெளியிடுவோர் - விற்பனையாளர்)
3/225, மாரியம்மன் கோயில் தெரு,
குண்டூர் பர்மா காலனி, ஏர்போர்ட் போஸ்ட்,
திருச்சி - 620 007.

முதற்பதிப்பு : 2007

விலை : ரூ. 35

ஒளி அச்சு :

கிறிஸ்ட் கம்ப்யூட்டர்ஸ்,

104.4, 9வது தெரு, டிரஸ்ட்புரம்,

சென்னை - 600 026.

அச்சிட்டோர் :

ஸ்கிரிப்ட் ஆப்ஸெட்

பெரியார் பாதை, சென்னை - 94.

அணிந்துரை

உண்மையைத் தேடும் எழுத்துக்களுக்கும் பேச்சுக்கும் சொந்தக்காரர் திரு. செ. இலக்குவன். புதுச்சேரியில் 21. 07. 1954 அன்று பிறந்த இவர், எம்.ஏ. உளவியல் முதுகலைப் பட்டம் பெற்றவர். மற்றும் முதுநிலை வணிக மேலாண்மையியலில் பட்டயமும், கம்பெனிகளின் சட்டத்தில் பட்டயமும் பெற்றவர். நடுவணரசுப் பதிவுபெற்ற மனநல நிபுணர்.

'அரட்டைகள்' என்ற சிற்றிதழைப் பல ஆண்டுகளுக்கு முன்பே நடத்தியவர். 'சூப்பர் நியூஸ்' என்ற இதழில் மனவியல் கட்டுரைகள் வடித்தவர். புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய 'புதுவை 2000' என்ற கருத்தரங்கில் உளவியல் ஆய்வுக் கட்டுரை வாசித்தவர்.

தற்பொழுது புதுவை - 9, திலகர் நகரில் மனநல நிபுணர் பணியில் தம்மை முழுநேரமும் ஈடுபடுத்திக் கொண்டிருப்பவர்.

இவர் ஒரு புத்தகத் தேனீ; நட்புக்கு இலக்கணம். சங்ககால இலக்கியப் புலவர்கள் பாணியில் சொல்வதானால் 'நின்ற சொல்லர்'.

தெளிவான தேடலையே தன் வாழ்வாக ஆக்கிக்கொண்டவரான செ. இலக்குவன், அத்தேடலின் மூலவிழுது ஒன்றை இந்நூலாய்த் தந்திருக்கிறார்.

பேராசிரியர் **அ. பசுபதி**

(தேவமைந்தன்)

முன்னுரை

"உயர் ஒழுங்கின் பாதை" (Tao Te Ching) என்ற நூலின் தழுவல் இது. இதுவே தமிழில் முதல் நூலாகும். இந்நூல் 'சீன மொழியில் வெறும் ஐந்தாயிரம் சொற்களை மட்டுமே கொண்டது.' இந்நூல் பைபிளுக்கு அடுத்தபடியாக அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

மூல நூலாசிரியர் லயோட்சு கி.மு. 570இல் 'கு' மாநிலத்திலுள்ள 'குஷ்ரென்' என்னும் கிராமத்தில் பிறந்தார். அவர் அரசருடைய இரகசியப் பதிவேடுகளின் காவலராகச் சில காலமும், பின்பு அரசாங்கத்தின் வரலாற்று ஆசிரியராகவும் பணியாற்றினார். லயோட்சு நமது 87ஆவது வயதில் காலமானார்.

தாவோ என்றால் 'வழி' அல்லது 'செய்முறை' என்று பொருள்படும். அவருடைய கோட்பாடுகள், கன்பூசியஸின் கோட்பாடுகள் போல் அல்லாமல் முற்றிலும் **இயற்கையோடு ஒத்த ஒழுக்க நெறிகளேயாகும்.** தெய்வீகக் கோட்பாடுகள் அவருடைய நூலில் குறிப்பிடப்படவில்லை.

இயற்கையில் படைக்கப்பட்ட அனைத்து உயிர்களும் தத்தம் கடமைகளைச் செய்கின்றன. அவை எந்த உரிமைக் குரலையும் எழுப்புவது இல்லை. அதே போல மனிதனும் தனது கடமைகளைச் செய்யவேண்டும் என்கிறார் லயோட்சு.

லயோட்சு, இயற்கை நெறிகளில் தலையிடக் கூடாதென்றும் அதனுடன் ஒத்து வாழ வேண்டுமென்றும் விளக்குகிறார். நகரங்களிலிருந்தும், அதிகாரிகளிடமிருந்தும், நூல்களிடமிருந்தும், சீர்திருத்தவாதிகளிடமிருந்தும் ஒதுங்கி அமைதியாக வாழ்வதே சிறந்தது என்றும் கூறுகிறார்.

'விளக்கப்படுவது எதுவோ அது 'தாவோ'வாக இருக்க முடியாது' என்கிறது இந்நூல்.

எனவே தாவோவைப் பற்றி நீங்கள் எளிதில் அறிய, சில கதைகளை இதனுடன் இணைத்துள்ளேன். இக்கதைகளைப் படித்துவிட்டு நீங்கள் தாவோவைப் பற்றி மேற்கொண்டு படித்துப் பயனடையும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இந்நூலின் மூலநூலாசிரியர் சித்தர் லயோட்சு அவர்களை வணங்குகிறேன்.

எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய அ. பசுபதி அவர்களுக்கும், நண்பர் திரு. கு. கணேசன் அவர்களுக்கும் நன்றி.

எங்களது தாய் தந்தையர்களும் என் உடன் பிறந்தவர்களான பொறியாளர் திரு.கு.செ. சத்தியமூர்த்திக்கும்,

வழக்கறிஞர் செல்வி செ. சொர்ணம்மாள் மற்றும் திரு. ஆனந்த பாஸ்கரன் அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

எமது நண்பர்கள் வழக்கறிஞர் ச. பரிமளம் அவர்களுக்கும், திரு. பெ. லெனின் அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

இந்நூலை மிகுந்த முயற்சி எடுத்து வெளியிட்ட பெரியவர் வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

செ. இலக்குவன்

பதிப்புரை

இயற்கையைக் காப்போம்;
இயற்கையுடன் இணைந்து வாழ்வோம்!

மனிதரின் நெஞ்சில் நினைவுகள் மண்டிக் கிடக்கின்றன. நினைக்கத் தெரிந்தவன் மனிதன்! எனவேதான் நினைவுகளின் பின்னலில் அவன் சிக்கியிருக்கிறான். நினைவுகள் என்பவை யாவும் தேவை தேவை என்றே அலைகின்றன! கூவுகின்றன!

கடல் அலைகள்கூடச் சில நேரங்களில் ஓயும்; அடங்கும்.

ஆனால், மனித நெஞ்சின் ஆசை அலைகள் ஓய்வதில்லை; ஆரவாரம் அடங்குவதில்லை.

எண்ணுவதெல்லாம் உயர்வல்ல;
கொள்ளுவதெல்லாம் எழுச்சியல்ல!
தேவை, தேவை! ஆசை! ஆசை!

ஆசைகளைச் சுமந்தவனாகத் தள்ளாடுகின்றான், மனிதன். ஆம், மனிதன் பேராசைகளின் சுமைதாங்கியாகிவிட்டான்.

சும்மாயிரு! - இது தாயுமானவர் பெற்ற பாடம்! நமக்குத் தந்த பாடம்! நெஞ்சில் சலனமற்று இரு; நினைவுகள் அற்று இரு! அமைதி கொள்!

பற்று அறு! பற்றை விடு!

இவை அனைத்தின் சுருக்கமே சும்மாயிரு!

வேண்டுதலும் இல்லை, வேண்டாமையும் இல்லை.

இதுவே பற்று அற்ற நிலையோ!

பசுமை எழிலை மனிதன் பாழாக்கிவிட்டான்.

நீர்நிலைகளையும் தூர்த்துவிட்டான்; தீர்த்துவிட்டான்.

சின்னஞ்சிறு சிதல்கள்(செல்) செய்யும் அழிவைவிட மனிதர் செய்துள்ள அழிவு மிகமிக அதிகம்.

மனிதன் பெரியவன் அல்லவா! ஆறு அறிவுடையவன் அல்லவா! அவன் ஆற்றலும் பெரிதாய்த்தானே அமையும்!

உலகம் வளர்ந்துள்ளதாக அறிவுலகம் கூறுகிறது. உலகம் அழிந்துவிட்டதாக இயற்கை கூறுகிறது!

நமக்கெல்லாம் குழப்பம்!

கண்டுபிடிப்புகளே தீமையோ!

ஆக்கம் என்பதே அழிவுதானோ!

மனித சமுதாயம் வளர்ந்துள்ளதே!

மட்டற்ற புதுமைகள் தோன்றியுள்ளனவே!

எல்லாம் பொய்த் தோற்றம்! புகைத்தோற்றம்! நிலையற்றவை, பொருளற்றவை; தேவையற்றவை!.... - இப்படி ஒரு குரல்!

சிந்தனை சிதறுகிறது! சிலிர்க்கிறது!

ஒரு காட்சி!

உலகம் - இயற்கை அழுகிறது! அழிக்கிறது!

நாம் திகைக்கிறோம்! மிரள்கிறோம்!

ஐயத்தில் அலசப்படுகிறோம்! அறிவு அசைபோடுகிறது!

ஓடிஓடியே பழகிவிட்ட மனித வாழ்வு, தேடித் தேடித் தேடியே பழகிவிட்ட மனித வாழ்வு திகைப்பினை நெருங்கிவிட்டதோ?

தீர்ப்புக்கு வந்து நிற்கிறதோ?

ஓய்வற்ற சிந்தனை உதவாதோ?

குறிக்கோள் என்பது தேவையில்லையோ?

தேவையும் தேடுதலும் வேண்டாமோ?

திடுக்கிடச் செய்யும் திருப்பம்!

திகைக்க வைக்கும் செய்தி!

இந்நூல் தரும் சீனத்துச் செய்தி சிறப்பான செய்தி!

இப்பொழுது ஒரு மின்னல் ஒளி!

திருவள்ளுவரின் திருமொழிகள் நம் நினைவில் தெளிவாய்த் தெரிகின்றன:

தன்உயிர் தான்அறப் பெற்றானை ஏனைய
மன்உயிர் எல்லாம் தொழும். (268)

நில்லாதவற்றை நிலையின என்று உணரும்
புல்லறி வாண்மை கடை. (331)

புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு. (340)

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன். (341)

வேண்டின் உண்டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டு இயற்பால பல. (342)

தலைப்பட்டார் தீரத் துறந்தார்; மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர். (348)

இவையெல்லாம் நம் மயக்கத்தைப் போக்கினவா? இல்லையே!

கொள்வோம், பெறுவோம், அடைவோம் என்றே நம் மனம் ஏங்குகிறது; துடிக்கிறது; அலைகிறது!

சும்மாயிரு! சும்மாயிரு! எனும் குரல் நம்மை எச்சரித்தது! கேட்டோமா? கேட்க நினைத்தோமா? கேளாமல்விட்டோம். அதனால் கெட்டோம்!

முன்னேறு ! முன்னேறு! என்று முடுக்கிவிடும் நிலை ஒருபக்கம்!

எல்லாம் தீர்ந்தது! எல்லாம் பாழானது! என்னும் அச்சத்தின் அவலக்குரல் ஒருபக்கம்!

மானிட வாழ்வின் மாளாப் பேராசைகள், புயலாய் கனலாய் மூண்டு, திரண்டு மோதுகின்றன. மாந்தரை மூழ்கடிக்கின்றன.

அந்த நிலையில், உலகம் வெந்த நிலையில், சிந்தையை ஆற்றுவித்துக் குளிர்விக்கும் சிந்தனை விருந்தாக வந்துள்ளது சீனத்து அமைதிக்குரல்! இப்பொழுது நமக்குப் புதுமைக்குரல்! கேட்போம்! கிறுகிறுப்புப் போகட்டும்!

புதுவைவாழ் மனநல மருத்துவர் செ. இலக்குவன் எடுத்தளிக்கிறார். மனநலம் வளர்க!

பருவகாலமோ? பக்குவம் தருமோ? பயன் பெறுவோமோ? படைத்துள்ள விருந்துக்குப் பண்பார்ந்த நன்றி! அவர் முயற்சிக்கு வாழ்த்து! தமிழக அன்பர்க்குச் சீனத்துச் சிந்தனையைத் தருவதில் மகிழ்வடைகிறோம்.

அன்புடன்

வெள்ளையாம்பட்டு சுந்தரம்

தெளிவாக வாழும் கலை!

லயோட்சுவின் தாவோ

நீர்ச் சூழல்

ஒருநாள் கன்பூசியஸ், லூலி யாங் என்னும் அருவியைப் பார்த்துக்கொண்டிருந்தார். அது மிகுந்த உயரத்தைக் கொண்டது. அதனால் ஏற்படும் சுழலிலிருந்து யாரும், எதுவுமே தப்பமுடியாது. அப்போது வயதில் முதியவர் ஒருவர் அதனுள் செல்வதைக் கன்பூசியஸ் கண்ணுற்றார். இது அவருக்கு மிகுந்த வியப்பைக் கொடுத்தது. உடனே அவர் தமது சீடர்களை அழைத்து, முதியவரைக் காப்பாற்றும்படிக் கூறினார். ஆனால் அந்த முதியவரோ எளிதாகவே கரையேறிவிட்டார்.

கன்பூசியஸ் அவரிடம் வந்து வியப்புடன், நீங்கள் எப்படி இந்தச் சுழலிலிருந்து, தப்பிப் பிழைத்தீர்கள்? என்று கேட்டார்?

''நான் ஆற்றில் நீந்த மிகுந்த ஆசைப்படுபவன். இது எனக்கு ஓர் இனிய அனுபவம்'' என்றார் முதியவர்.

இதனை விளக்கும்படி கேட்டார் கன்பூசியஸ்.

''நீர்வீழ்ச்சியில் தோன்றும் சுழலை எதிர்த்து நான் போராடவில்லை. அதனுடைய போக்கிலேயே இருந்தேன்.

அந்தச் சுழல் கீழே செல்லும்பொழுது குறுகிக்கொண்டே வந்து பாதாளத்தில் மிக மெல்லியதாகி விடுகிறது. அங்கு அதன் சக்தி மிகக் குறைவாகவே இருக்கும். நான் அதனுடன் இயைந்து கீழே சென்றுவிட்டதால் அந்தச் சூழலே என்னை வெளியே தள்ளிவிட்டது. நான் எந்த முயற்சியுமே செய்யவில்லை" என்றார் முதியவர்.

தேவையற்ற மரம்!

லயோட்சு தமது சீடர்களுடன் ஒரு காட்டைக் கடந்து சென்று கொண்டிருந்தார். வரும் வழியில் அவர் ஒரு காட்சியைக் கண்டார். அங்கிருந்த எல்லா மரங்களும் அரண்மனைக்கு மரச்சாமான்கள் செய்ய வெட்டப்பட்டன.

ஆனால் ஒரே ஒரு மரம் மட்டும் விரிந்து பரந்து இருந்தது. அம்மரத்தின் அடியில் எல்லாத் தச்சர்களும் தங்கி இளைப்பாறிக் கொண்டிருந்தனர்.

அந்த ஒரு மரம் மட்டும் ஏன் வெட்டப்படாமல் உள்ளது என்று அறிந்து வரும்படி தமது சீடர்களை ஏவினார் லயோட்சு.

சென்று வந்த சீடர்கள், அந்த மரம் நேராக இல்லாமல் அநேக முடிச்சுகளைக் கொண்டதாக இருப்பதால் அடுப்பெரிக்கக்கூடப் பயன் அற்றது என்று அவர்கள் கூறியதாக விளக்கினர்.

லயோட்சு கூறினார் : "இந்த மரத்தைப் போன்றே நீங்கள் விறைப்புத்தன்மை அற்று இருக்கும்போது உங்களுக்கு எந்தத் துன்பமும் கிடையாது. விரிந்து பரந்துபட்ட இந்த மரத்தின் கீழ் எல்லோரும் நிழலுக்காக ஒதுங்குவது போல் ஒருகாலத்தில் உங்களால் பலர் நன்மை அடைவார்கள் என்றார்.

பட்டாம்பூச்சி

லயோட்சுவின் சீடர் சாங் சூ என்பவர் தாம் பட்டாம்பூச்சியாக இருந்து ஒவ்வொரு மலர்மீதும் பறந்து வருவதாகக் கனவு ஒன்றைக் கண்டார். தூக்கத்திலிருந்து விழித்த சாங் சூ கவலையில் ஆழ்ந்தார்.

இதனைக் கவனித்த சீடர்கள், சாங் சூவிடம் காரணத்தை வினவினர். சாங் சூ, தாம் கண்ட கனவை விவரித்தார்.

சீடர்கள் சிரித்துக்கொண்டு, ‘இது கனவுதானே! அதற்கு ஏன் கவலையுடன் இருக்கவேண்டும்!’ என வினவினர்.

சாங் சூ நிதானமாகப் பதில் அளித்தார் :

‘நான் பட்டாம் பூச்சியாக இருந்துகொண்டு மனிதனாக இருப்பதாகக் கனவு காண்கிறேனா? அல்லது மனிதனாக இருந்துகொண்டு பட்டாம்பூச்சியாகப் பறப்பதைப் போன்று கனவு காண்கிறேனா என்பதே எனது கவலை.’

இயல் : 1

✤ விளக்கப்படும் தாவோ (வழி) என்றும் நிலைத்ததாக இருக்கமுடியாது.

✤ இதனைப் பெயரிட்டுப் பொருள் கூறும்போது இது மாறாத பெயர் கொண்டதாக இருக்கமுடியாது.

✤ வானகத்திற்கும் வையகத்திற்கும் முன்நின்றது ஆதி என்று அழைக்கப்படும்.

✤ இதன் படைப்பு முழுமையும் அனைத்துப் பொருட்களுக்கும் தாய் எனப்படுகிறது.

✤ என்றும் நிலைத்த அநாதியை அமைதியாய்க் கூர்ந்து நோக்கும்போது இப்பேரண்டமே பெரும் புதிராகத் தோற்றமளிக்கும்.

✤ என்றும் அழிவற்ற படைப்பு முழுமையும் நோக்கினால் இவற்றின் வேறுபாடுகள் தனிச்சிறப்பாகத் தோன்றும்.

✤ தோற்றத்தில் வேறுபாடாகத் தோன்றும் இவை இரண்டும் மூல ஆதாரத்தில் ஒத்த பொருள்களே.

✤ இந்த ஒத்த பொருள்களே மூலப் பரம்பொருள் எனப்படும்.

✤ இந்த எல்லையற்ற மூலப்பரம்பொருள் என்ற வாசலில் இருந்துதான் வெட்டவெளியின் அனைத்துப் பொருட்களும் தோன்றி வந்துள்ளன.

இயல் : 2

✤ அழகும் அழகற்றதும் ஒன்றாகத் தோன்றும்போது இவ்வுலகத்தின் அழகு அனைத்தும் அழகாய்த் தோன்றுகிறது.

✤ தீமைகள் வாழும்போதுதான் நல்லவைகளின் நல்லதை அறியமுடிகிறது.

✤ படைப்பு என்ற கருத்து அநாதி என்ற கருத்தைத் தோற்றுவிக்கின்றது.

✤ சொகுசானவர்களைக் கடும் துன்பம் சூழ்கிறது.

✤ இது நீண்டது, இது குறுகியது என்பது பொருள்களை ஒப்பிடுவதால் கிடைக்கிறது.

✤ உயர்ந்தது தாழ்ந்தது என்பது அவற்றின் நிலைகளைப் பொறுத்து வேறுபடுகிறது.

✤ ஒலியுடன் எதிரொலி ஒன்றுசேர ஒத்து இயங்குகிறது.

✤ அடுத்தது என்பது முன்னால் என்பதுடன் தொடர்பு கொண்டு வருவது.

✤ ஞானிகள் செயலற்று சும்மா இருப்பதால் அவர்களது போதனைகள் எந்தச் சொற்களையும் கொண்டிருக்காது.

இயல் : 3

✤ புகழை மிஞ்சிய, மதிப்பு வாய்ந்த ஒன்று பகைமையிலிருந்து மக்களைக் காப்பாற்றும்.

✤ மதிப்பிட முடியாத அரிய பொருட்கள் திருட்டிலிருந்து பாதுகாப்பாக இருக்கும்.

✤ பற்றற்ற இதயம் குழப்பத்திலிருந்து பாதுகாப்பாக இருக்கும்.

✤ எனவே ஞானி கீழ்க்கண்ட கொள்கைகளை கடைப்பிடிக்கிறான்.

இதயத்தை வெற்றிடமாக வைப்பது,
வயிற்றை நிரப்பிக் கொள்வது,
ஆசைகளைச் சுருக்கிக் கொள்வது,
எலும்புகளை வலுவாக்கிக் கொள்வது.

எது தீமையானது, எது நல்லது என்று அறிந்து அவன் இவைகளைக் காக்கிறான். இவ்வாறாக அவனிடம் எந்தத் தந்திர எண்ணங்களும் செயல் புரிவதில்லை. அவன் செயலற்றுச் சும்மா இருப்பதால் அவனை எதுவுமே ஆட்சிசெய்ய முனைவது இல்லை.

இயல் : 4

திணித்து வைக்கப்பட்டிருப்பது போல் அல்லாமல் தாவோ வெறுமையாய் இருப்பதால் பயன்படுத்த ஏதுவாகிறது. இதனது ஆதிப் பரம்பொருளில் இதனைப் பார்ப்பதற்கு அனைத்துப் பொருள்களின் மூலமாகத் தோன்றுகிறது. இதனது ஆழம் எப்போதும் எதனையும் கொண்டுள்ளதாகத் தோன்றுகிறது.

இது எதனது வழித்தோன்றல் என்று எனக்குத் தெரியாது.

ஆனால் இதனைப் பார்க்கும்போது இயற்கையின் ஆதி மூலம் போல் தோன்றுகிறது.

இயல் : 5

✤ தங்களால் விளைந்த நன்மைக்காக வானகமும் வையகமும் உரிமை கொண்டாடுவது இல்லை.

✤ அவைகளுக்கு உலகத்தில் உள்ள அனைத்துப் பொருட்களும் வைக்கோலினால் செய்யப்பட்ட நாயைப் போன்றவை தாம்.

✤ தன்னால் விளைந்த நன்மைக்கு ஞானி உரிமை பாராட்டுவது இல்லை.

✤ அவனுக்கு உலக மக்கள் வைக்கோலினால் செய்யப்பட்ட நாயைப் போன்றவர்கள்தாம்.

✤ வானகத்திற்கும் வையகத்திற்கும் இடைப்பட்ட பகுதி கருமானது துருத்தியைப் போன்றது.

✤ அந்த வெறுமை எதனையும் தடுத்ததாகத் தெரியவில்லை.

✤ அது அசையும்போது பலவற்றைக் கொண்டுவருகிறது.

✤ ஒருவன் அதிகமானதைப்பேசிக் கொண்டிருக்கும்போது விரைவில் களைப்படைகிறான்.

✤ தன்னுள் என்ன உள்ளது என்பதை அறிந்து பாதுகாப்பதே ஒருவனுக்குச் சிறந்தது.

இயல் : 6

✤ வெட்டவெளியும் ஆன்மாவும் என்றுமே அழிவதில்லை.

✤ அவை உருவமடையும்போது மறைபொருள் உள்ள தாய் (Mystic Mother) என்று அழைக்கப்படும்.

✤ இவற்றின் வாசல்கள் வானக வையகத்தின் மூலத்திலிருந்து ´வருகின்றன.

✤ இதன் தோற்றம் என்றும் அழியாது நிலைத்திருப்பதாகத் தோன்றுகிறது.

✤ பயன்படுத்தப்படுவதால் அது என்றுமே சோர்வு அடைவதில்லை.

இயல் : 7

✤ என்றும் நிலைத்திருப்பது வானகம், என்றும் செயல்படுவது வையகம்

✤ அவை என்றும் நிலைத்திருப்பதற்கும் செயல்படுவதற்கும் காரணம், அவை தமக்காக மட்டுமே வாழ்வதில்லை என்பதுதான்.

✤ அவை நீண்ட காலம் வாழ்கின்றன.

✤ ஞானி இதன் பின்னணியை அறிந்ததால் அவன், முன் நிற்கிறான்.

✤ அவன் தன்னலத்தை மறந்ததால் நீண்ட காலம் வாழ்கிறான்.

✤ அவன் தன்னை அறிவதில் நாட்டமற்றவன் என்று பொருள் கிடையாது.

✤ அவன் தன்னை அறிவதில் உண்டான நாட்டம் இதில் வெளிப்படவில்லையா?

இயல் : 8

உயர் ஒழுங்கு நீரைப் போன்றது. நீர் எதற்கும் நலம் விளைவிக்கக் கூடியது. அது எவற்றுடனும் போரிடுவது கிடையாது. பிறர் அதனை வெறுத்தாலும் அது தனது நிலையில்தான் உள்ளது. எனவே அது தாவோவிற்கு அருகில் உள்ளது எனலாம்.

✤ வாழ்விடத்தில், வாழத் தகுந்த நல்ல இடம் இதுவே என்று எண்ணு.

✤ உணர்வில், ஆழ்ந்த இதயத்தைச் செலுத்தி உணர்ந்திரு.

✤ நட்பில், மனிதர்கள் மீது நல்ல சிந்தனையோடு பழகு.

✤ பேசும்போது, சொற்கள் நம்பிக்கையுடன் இருக்கட்டும்.

✤ கொள்கையில், நல்ல ஒழுங்கு தொடர்வதாகத் தொடர்க.

✤ செயலில், பொருட்களை எளிமையாகக் கையாண்டு செய்க.

✤ இயக்கம், நல்வாய்ப்புப் பயனை ஏற்படுத்தும் செயலாக இருக்கட்டும்.

✤ அங்கே வெறுப்பு இல்லையாதலால் அங்கே வேறுபாடுகள் இல்லை.

இயல் : 9

✤ ஒன்றை அதிகமாகக் குவித்துப் பாதுகாப்பதைவிட அதை அதன் போக்கில் விட்டுவிடுவது மேலானது.

✤ கத்தியை அதிகக் கூர்மையாக வைத்திருப்பது நீண்டகாலம் வாழ்க்கைப் பிழைப்பாக இருக்க முடியாது.

✤ ஓர் அறை முழுவதும் தங்கமும், நீலம், பச்சைக் கற்களையும் குவித்து வைக்கும்போது அதனை யாராலும் பாதுகாக்க முடியாமல் போகும்.

✤ செல்வமும் செல்வாக்கும் ஒருவருக்கு ஆணவத்தைக் கொடுத்து அவரையே அழித்துவிடும்.

✤ குவிந்ததையும் சேர்ந்ததையும் விட்டுவிடுங்கள்.

✤ இதுதான் விண்ணகத்தின் தாவோ (வழி) என்பது.

இயல் : 10

✤ அலைந்துகொண்டிருக்கும் உங்கள் ஆன்மாவை ஒரே நிலையில் நிறுத்தி வைக்க முடியுமா?

✤ உங்கள் சுவாசத்தை ஒழுங்கபடுத்த முடியுமா? மென்மையாய் இருக்கமுடியுமா? சிறுகுழந்தையைப் போல் நெகிழ்ச்சியாக இருக்கமுடியுமா?

✤ எதிர்பாராது நடப்பவைகளிலிருந்து தெளிவு பெற்றுவிட்டீர்களா? குற்றத்திலிருந்து விடுபட்டு விட்டீர்களா?

✤ மக்களிடம் அன்பு செலுத்தமுடியுமா? செயலற்றுச் சும்மா இருக்கமுடியுமா?

✤ இயற்கை பெண்மையைப் போன்றது. அது தனது வாயிலைத் திறக்கவும் மூடவும் முடியும். அதுபோல் உங்களால் முடியுமா?

✤ அறிந்ததைக் கைவிட்டு எங்கும் எதிலும் நுழைந்து ஊடாடி ஞானியராகி வெளிவர முடியுமா?

இயல் : 11

✤ முப்பது ஆரக்கால்கள் ஒரு சக்கரத்தின் அச்சுப்பகுதியில் கூடுகின்றன.

✤ அந்தப்பக்கம் வெற்றிடமாக உள்ளதால், நாம் அதை வண்டிச் சக்கரமாகப் பயன்படுத்துகிறோம்.

✤ களிமண், பாத்திரமாக உருவாக்கப்படுகிறது.

✤ அதனது உள்ளீடான பாகம் வெற்றிடமாக இருப்பதால் அதைப் பாத்திரமாகப் பயன்படுத்துகிறோம்.

✤ வாயிற்படிகளும், சன்னல்களும் வீட்டின் சுவர்களிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட வெற்றுப்பகுதிகள். அவை வெற்றிடமாக இருப்பதனால் நாம் அவற்றைப் பயன்படுத்துகிறோம்.

✤ எனவே ஒரு பக்கத்தில் படைக்கப்பட்டதனாலும் பயனடைகிறோம். மறுபக்கத்தில் படைக்கப்படாததாலும் பயனடைகிறோம்.

இயல் : 12

✤ ஐந்து வகை நிறங்கள் ஒரு மனிதனின் பார்வையைக் குருடாக்கும்.

✤ ஐந்து வகைச் சுரங்கள் மனிதனது கேள்வியைச் சாகடித்துவிடும்.

✤ ஐந்து வகைச் சுவைகள் மனிதனது நாக்கின் உணர்வை அழித்துவிடும்.

✤ இவற்றின்மீது பற்று வைப்பதாலும், அடிமையாவதாலும் மனிதன் கொடுங்கோலனாக மாறுகிறான்.

✤ புலன் உணர்விற்குக் கட்டுப்பட்டுப் பொருட்களைக் கடுமையான முறையில் அடைவதால் அவை அவனது நடத்தைக்கு ஊறு செய்கின்றன.

✤ எனவே ஞானி உணவை உண்பது வயிற்றிற்காக மட்டுமே தவிர, கண்களுக்காக அல்ல.

✤ அவன் மூலத்தை அறிந்து மற்றதைத் தள்ளிவிடுகிறான்.

இயல் : 13

✤ விருப்பு, வெறுப்பு பயத்தைப் போன்றது

✤ நன்மை, தீமை உடலைப் போன்றது.

✤ விருப்பு வெறுப்பு பயத்தைப் போன்றது என்றால் அதன் உட்பொருள் என்ன? விருப்பு என்பது உயர்ந்த நிலை; வெறுப்பு என்பது அதன் தாழ்ந்த நிலை. இவைகளை நீங்கள் தோற்கடித்தாலும் சரி, இவைகளிடம் நீங்கள் தோற்றாலும் சரி, நீங்கள் பயப்படத்தான் செய்வீர்கள். எனவே விருப்பு, வெறுப்பு பயத்தைப் போன்றதாகிறது.

✤ நன்மை தீமை உடலைப் போன்றது என்றால் அதன் உட்பொருள் என்ன? நாம் உடலுடன் இருப்பதால்தான் நன்மையும் தீமையும் நம்மை வந்தடைகின்றன.

✤ நமக்கு உடல் என்ற ஒன்று இல்லாவிட்டால் நன்மை தீமை எப்போது நம்மைத் தாக்கும்?

✤ பொருட்கள் நிறைந்த இவ்வுலகத்தில் அவற்றின்மீது பற்றுக் கொள்ளாதிருக்கும்போது அவைஅவனை ஏதும் செய்யமுடியாது. ஒருவன் பொருள்மீது பற்று அற்று இருப்பதால் உலகம் அவன்மீது பற்றுடன் இயங்குகிறது.

இயல் : 14

✤ மிகத் தெளிவானவற்றை வெறும் கண்களால் காணமுடியாது; ஆனால் அவதானிக்கலாம்.

✤ மிக அரிதானதைக் கேள்விப்படலாம்; ஆனால் வெறும் காதுகளால் கேட்கமுடியாது.

✤ மிக நுட்பமானதைத் தொட்டுப் பார்த்துத் தேடலாம். ஆனால் கைகளினுள் வைத்துக் கொண்டிருக்க முடியாது.

✤ இந்த மூன்றும் ஒன்றுசேர, ஒன்றுடன் ஒன்றாக கலந்திருக்கும்போது அதனை மிக நெருங்கிச் சோதிக்க முடியாது.

✤ அது வெளியில் தெரியும்போது சாதாரணமாகவே தோன்றும்.

✤ மறைந்திருப்பதால் அது இருண்டதும் கிடையாது.

✤ எல்லையற்று இருப்பதால், அதனை விளக்கவும் முடியாது.

✤ அது மீண்டும் அநாதியில் போய் ஒடுங்கும்.

✤ இதுவே அருவத்தின் உருவம் என்று அழைக்கப்படுகிறது.

✤ இதுவே அநாதியின் உருவம் என்பது.

✤ இதுவே மர்மம் என்று அழைக்கப்படுகிறது.

✤ அதனைச் சந்திக்கும்போது, அதன் முகத்தை நீ காணமுடியாது.

✤ அதனைத் தொடர்ந்தாலோ அதனது பின்பகுதியை நீ காணமுடியாது.

✤ தாவோ வந்த வழியைக் குறித்துப் பழையதை ஆராய்ந்து பார்த்தால், நீ நிகழ்கால படைப்புகளின்

தலைவனாகவும், கடந்தகாலத் தோற்றங்களை அறிந்தவனாகவும் இருப்பாய்.

✤ இதுவே தாவோவைப் பற்றிய சிறுகுறிப்பு என்று அழைக்கப்படும்.

இயல் : 15

✤ முற்காலத்தில் தாவோவைச் சரியாக அறிந்தவன் எதிலும் நுட்பமாக ஊடுருவக் கூடியவன். அவனது ஞானத்தை அறிவது மிகக் கடுமையானது. அவனை அறிவது கடினமானது என்பதால் அவனது உருவத்தை உங்கள் முன் முயற்சி செய்து நிறுத்துகிறேன்.

✤ குளிர்காலத்தில் நதியின் நீரோட்டத்தைக் கடப்பவன் எப்படி விழிப்புடன் இருப்பானோ அவ்வாறே அவன் விழிப்புடன் இருப்பான்.

✤ அவனது தயக்கம் அண்டை அய்லைக்கண்டு ஒருவன் அஞ்சுவது போன்று இருக்கும்.

✤ அவனது பணிவு, ஒரு விருந்தினன் எப்படி இருப்பானோ அவ்வாறு இருக்கும்.

✤ அவனது நெகிழ்ச்சி, பனிக்கட்டி உருகி ஓடுவது போன்று இருக்கும்.

✤ அவனது எளிமை, மக்கள் நடமாட்டமற்ற அமைதியான காட்டைப்போல் இருக்கும்.

✤ அவனது வெறுமை, வெட்டவெளி போல் இருக்கும்.

✤ கலங்கிய நீரைப் போன்று அவனை எளிதில் பார்க்க முடியாது.

✤ யாரால்தான் இருளிலிருந்து மெல்ல மெல்ல ஒளியைப் பரிசுத்தமாக மாற்றிவிட முடியும்?

✤ யாரால்தான் மெல்ல மெல்ல மாறிவரும் கலங்கிய நீரை உடனேயே மாற்றமடையச் செய்யமுடியும்?

✤ பேராசை அற்றவன் இக்கொள்கைகளை பின்பற்றுவான்.

✤ அவன் பேராசை அற்று இருப்பதால் அவன் அழியும்போது மட்டுமே அவன் தன்னை புதிதாக மாற்றிக்கொள்வான்.

இயல் : 16

✤ பூரண வெறுமையை அடைந்தவன் பூரண அமைதியாய் இருப்பான்.

✤ அனைத்துப் பொருள்களும் படைப்புக்குள் வருவதையும் அவை மீண்டும் அதனுள் திரும்புவதையும் நாம் பார்க்கிறோம்.

✤ நாம் நன்கு அவதானிக்கும்போது அனைத்துப் பொருள்களும் செழித்து வெளிவருவதையும் அவை பின்பு மூலத்தில் சேர்வதையும் உணரலாம்.

✤ அவை தோற்றத்தில் போய்ச் சேர்வதை அமைதி என்று அழைக்கப்படுகிறது.

✤ இதன் பொருள் அது தனது பழைய நிலையைத் திரும்ப அடைந்தது என்பதுதான்.

✤ பழைய நிலையை அடைந்தது என்பது, என்றும் அழிவற்ற தன்மையை அடைந்தது என்பதாகும்.

✤ என்றும் அழிவற்ற தன்மையை (முக்கால முழுமை, ஈறில்காலம்) அறிந்தவன் ஞானமடைந்தவன் எனப்படுகிறான்.

✤ என்றும் அழிவற்ற தன்மையை அறிந்தவன் அனைத்தையும் தழுவுகிறான்.

✤ அனைத்தையும் தழுவுகிறவன் பெரும்பேற்றை அடைகிறான்.

✤ பெரும் பேற்றை அடைந்தவன் எங்கும் நிறைந்தவனாகிறான்.

✤ எங்கும் நிறைந்தவன் அனைத்தையும் ஆள்கிறான்.

✤ அனைத்தையும் ஆளும்போது அவன் தாவோவை அடைகிறான்.

✤ தாவோவை அடையும்போது அவன் என்றும் அழிவற்றவன் ஆகினான்.

✤ அவன் உடல் அழிந்தாலும் அவன் என்றுமே அழிவதில்லை.

இயல் : 17

✤ மிகச் சிறந்த ஆட்சியாளர்களை மக்கள் கண்டு கொள்வதே கிடையாது.

✤ தாழ்ந்தவர்களை மக்கள் போற்றிப் புகழ்ந்து கொண்டுள்ளார்கள்.

✤ அற்பமான ஆட்சியாளர்களைக் கண்டவிடத்து மக்களுக்குப் பயம்.

✤ மிகமிக அற்பமான ஆட்சியாளர்களை மக்கள் வெறுக்கிறார்கள்

✤ இந்த நம்பிக்கை அற்ற சந்திப்புகள் நிகழும் இடத்தில் நம்பிக்கை முடக்கப்பட்டிருக்கும்.

✤ இப்போதெல்லாம் இவைகளைச் சொற்களால் சொல்வதே அவசியமாகப் போய்விட்டதே!

இயல் : 18

✤ தாவோ முடிவுக்கு வரும்போது தர்மம் நேர்மை பற்றிக் கேள்வி முளைக்கிறது.

✤ போலி வேடதாரிகள் ஏற்படும்போது ஞானம், ஞானநிலை பற்றிப் பேச்சு எழுகிறது.

✤ குடும்ப உறவுமுறைகள் அதிகநாளுக்கு ஒத்து இசைந்து இல்லாது போகும்போது - அன்புக் குழந்தைகள் பெற்றோர் கடமை பற்றிப் பேச்சு எழுகிறது.

✤ நாட்டில் குழப்பம் - ஒழுங்கற்ற நிலை ஏற்படும்போது தேச பக்தர்கள் ஏற்கப்படுகிறார்கள்.

✤ தாவோ எங்கு உள்ளதோ அங்கு சமநிலை நிலவும்

✤ தாவோ முடிவுக்கு வரும்போது பல பொருள்கள் வேறுபட்டு வெளிவருகின்றன.

இயல் : 19

✤ அறிந்ததை விட்டு விலகிவிடு; துன்பம் என்னவென்று அறியமாட்டர்ய்.

✤ துறவி வேஷம் வேண்டாம். ஞானத்தை வெளிப்படுத்து. இதனால் மக்கள் நூறுமுறைக்குமேல் நன்மை அடைவார்கள்.

✤ தர்ம சிந்தையை விட்டு விலகிடு. நேர்மையை வெளிப்படுத்து. இதனால் மக்கள் அன்பின்

கடமைகளையும், பெற்றோரின் அன்பையும் திரும்ப அடைவார்கள்.

✤ குவிப்பதை விட்டு விலகிடு. குவிந்திருப்பதைக் கொடுத்திடு. அங்குத் திருடர்களும் கொள்ளைக் கூட்டத்தவரும் கிடையாது.

✤ மேலே கண்ட நான்கையும் பண்பாடு என்று தீர்மானித்தால் அது போதுமானது அன்று.

✤ கபடமற்ற தோற்றம், எளிமை, தன்னல நோக்கைத் தடுத்தல், ஆசையைச் சுருக்குதல் ஆகியவற்றைப் பின்பற்றும்போது மக்கள் அதில் தஞ்சமடைவார்கள்.

இயல் : 20

✤ ஆம் - இல்லை என்பதற்கு இடையே எங்கே அவ்வளவு வேறுபாடுகள் உள்ளன?

✤ நல்லது கெட்டதிற்கு இடையே எங்கே அவ்வளவு வேறுபாடுகள் உள்ளன?

✤ மற்றவர்களால் உண்டாகும் பயத்தினால் நாம் பயம் அடைகிறோம்.

✤ இவை மிகப் பல கணக்கற்று இருக்கின்றனவே!

✤ பொதுவாகவே மக்களது மகிழ்ச்சி, மிகப் பெரிய விருந்தில் அனுபவிக்கும் மகிழ்ச்சி போன்றது.

✤ அல்லது வசந்தகாலத்தில் கோபுரத்தின் உச்சியில் இருக்க அடையும் மகிழ்ச்சி போன்றது.

✤ எனது ஏகாந்தமே சாந்தமானது!. இதற்கு எந்தவிதமான அடையாளமும் கிடையாது.

✤ இன்னும் சிரிப்பு என்ன என்பதை அறியாத சிசுவைப் போலவும், வீடற்றவன் எங்கோ திரிந்துகொண்டிருப்பது போலவும் உள்ளேன்.

✤ மக்கள், தேவைக்கு அதிகமாகவே குவித்துக் கொண்டுள்ளனர்.

✤ எனது ஏகாந்தம் அவர்களுக்கு குறைவுடையதாகத் தோன்றுகிறது.

✤ நான் - எனது என்பது மனத்தால் உண்டாக்கப்பட்ட முட்டாள்தனம்.

✤ என்னே இதன் மோசமான அறியாமை!

✤ கீழானவை வெளிச்சமாகத் தெரிகிறது. எனது ஏகாந்தம் அவர்களுக்கு விறுவிறுப்பற்றதாகத் தோன்றுகிறது.

✤ கீழ்த்தரமானவை கபடமானது, எனது ஏகாந்தம் கள்ளம் கபடமற்றது.

✤ நான் புகழை விரும்பாததால் எதிலும் அக்கறையற்று இருக்கிறேன்.

✤ பொருள்களுடன் தொடர்பற்றதால் நான் இயற்கையின் போக்கிலேயே இருக்கிறேன்.

✣ பொதுவாகவே மக்கள் ஏதாவது செய்துகொண்டேதான் இருக்கிறார்கள்.

✣ எனது ஏகாந்தம் அவர்களுக்கு நடைமுறைக்கு ஒவ்வாததாகவும் இழிவானதாகவும் தோன்றுகிறது.

✣ எனது ஏகாந்தம் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டது, அது தாயிடமிருந்து தேடிப்பெறும் உணவைப் போன்றது என்று மதிக்கிறேன்.

இயல் : 21

✣ உயர்ந்த ஒழுங்கு தெளிவாகும்போது அது தாவோவைப் பின்பற்றும்

✣ தாவோ என்பது ஒரு பொருள். அது பார்வைக்குக் கிட்டாததாயும் புதிரானதாயும் தோன்றும்.

✣ பார்வைக்குக் கிட்டாததாயும் புதிரானதாயும் இருந்தாலும் அதனுள் பலபொருள்கள் உள்ளன.

✣ தாவோ நுட்பமானதாயும் விளக்குவதற்குக் கடினமானதுமான சாரத்தைக் கொண்டுள்ளது.

✣ இந்தச் சாரம் வேறுபாடற்ற உண்மையானது. அது நம்பிக்கையை உள்ளடக்கியது.

✣ இதன் வழியாகத்தான் அனைத்துப் பொருள்களின் தோற்றமும் சென்றுகொண்டிருக்கின்றன.

✣ இது ஆதியிலிருந்து இன்றுவரையில் தனது பெயரை இழந்ததே கிடையாது.

✣ தாவோதான் அனைத்திற்கும் மூலகாரணமென்று நான் எப்படி அறிந்துகொண்டேன்?

✣ மேற்கண்டதால்தான் அறிந்தேன்.

இயல் : 22

✣ பணிவுடன் இருங்கள், நீங்கள் அனைத்துடனும் இருக்கிறீர்கள்.

✣ வளைந்து கொடுங்கள், நீங்கள் அதிக வலிமை பெறுவீர்கள்.

✣ வெறுமையாய் இருங்கள், நீங்கள் முழுமையுடன் இருப்பீர்கள்.

✣ அதிகப் பிடிவாதம் அற்று இருங்கள், நீங்கள் எப்போதும் புதுமையுடன் இருப்பீர்கள்,

✣ பற்று குறையும்போது பலவற்றைப் பெறுகிறீர்கள்.

✣ கருத்துக்களைக் குவித்துக் கொண்டிருக்கும்போது அதனால் துன்பம் அடைவீர்.

✣ ஞானி ஒருமையில் ஒன்றும்போது இவ்வுலகு நிலைத்த தன்மையை அடைகிறது.

✤ அவன்தன்னை வெளியே காட்டிக்கொண்டிருக்காதபோது ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறான்.

✤ அவன்அகங்காரம் அற்றபோது குறிப்பிடக்கூடியவனாகிறான்.

✤ அவன் தற்புகழ்ச்சி அற்றபோது மதிக்கப்படுகிறான்.

✤ அவன் பெருமை பாராட்டதவனாக இருப்பதால் பலவற்றைக் கடக்கிறான்.

✤ ஒரு முதுமொழி உண்டு. அது "பணிவுடன் இருங்கள் நீங்கள் அனைத்துடனும் இருக்கிறீர்கள்" என்பதே.

✤ இவையெல்லாம் வெறும் வெற்றிச் சொற்களா?

✤ அவன் வீடு திரும்பும்போது உறுதியாக அனைத்தையும் பெற்று நிரம்பியவனாகவே திரும்புகிறான்.

இயல் : 23

✤ சொற்களைச் சுருங்கச் சொல்லிக் கையாள்வது இயற்கையானது.

✤ கடுமையான புயல் நாள் முழுக்க வீசுவதில்லை.

✤ கடும்மழை முழுநாளும் பெய்வதில்லை.

✤ வானக வையகத்தைப் போல் இதை யார் அமைத்தது?

✤ வானக வையகம் நிலையில்லாது போனால் மனிதன் என்ன ஆவது?

✤ அவன் தாவோவில் உடன்படும்போது அவன் தாவோவாகவே உருவமடைகிறான்.

✤ அவன் நல் ஒழுங்குடன் உடன்படும்போது அவன் நல்லொழுங்காகவே உருவமடைகிறான்.

✤ அவன் ஒழுக்கக் கேட்டில் உடன்படும்போது அவன் ஒழுக்கக்கேடனாக உருவமடைகிறான்.

✤ தாவோவால் அவன் உருவாகும்போது அவன் தாவோவிலிருந்து மேன்மையானவனாகவும் ஆவான்.

✤ நல் ஒழுக்கத்தில் உருவாகும்போது அவன் நல்ஒழுக்கத்தில் மேம்பாடு அடைவான்.

✤ மட்டமானவைகளால் அவன் உருவாகும்போது அவன் மட்டமானதைத்தான் பெறுவான்.

இயல் : 24

✤ பாதங்களில் கட்டுப் போட்டுக்கொண்டு அமர்ந்திருப்பவனால் சரியாக எழுந்து நிற்க முடியாது.

✤ காலை அகட்டி நடப்பவனால் சரியாக நடக்கமுடியாது.

✤ தன்னை வெளியே காட்டிக்கொண்டிருப்பவனால் ஒளி யடைய முடியாது.

✤ தற்புகழ்ச்சி கொண்டவனால் மதிப்பை அடைய முடியாது.

✤ பெருமை அடித்துக் கொண்டிருப்பவனால் மேன்மைத் தன்மை அடையமுடியாது.

✤ இவை தாவோவினால் ஒப்பிடும்போது இவ்வாறு கூறப்படும்.

“மிதமிஞ்சிய உணவு மிதமிஞ்சிய செயல்.”

✤ இதேபோன்ற அனைத்துப் பொருட்களையும் அவன் நிராகரிப்பான்.

✤ எனவே தாவோ மனிதன் இதுபோன்ற இயற்கையற்ற பொருட்களில் நிலைப்பது இல்லை.

இயல் : 25

✤ உள்ளார்ந்த ஒழுங்குடன் இயற்கையான ஒன்று, வானகமும் வையகமும் தோன்றுவதற்கு முன்பே இருந்தது.

✤ அது இயக்கமற்று, ஆழ அகலங்களை அளவிடற்கு அரிதாய், எந்த மாற்றமும் அற்று ஏகாந்தமாய் நின்றது.

✤ அது எந்தவிதமான சோர்வு மற்று, எங்கும் எதிலும் நீக்கமற நிறைந்திருந்தது.

✤ அது அண்டவெளி மூலத்திற்கே மூலமானது என்று கருதப்படுகிறது.

✤ அதன் பெயர் எனக்குத் தெரியாது.

✤ அதனை நான் தாவோ என்கிறேன். அனைத்தையும் கடந்தது அது என்றும் அழைக்கிறேன்.

✤ அனைத்தையும் கடந்தது எங்கும் செல்லக்கூடியது. எங்கும் செல்லக்கூடியது என்றால் எல்லையற்றதைக் கடக்கக்கூடியது என்று பொருள்.

✤ எல்லையற்றதைக் கடக்கக்கூடியது என்றால் எங்கும் திரும்பி வரக்கூடியது என்றும் பொருள்படும்.

✤ அனைத்தையும் கடந்ததாக தாவோ இருப்பதால், வானகம் அனைத்தையும் கடந்ததாகிறது, வையகம் அனைத்தையும் கடந்ததாகிறது, மனிதனும் அனைத்தையும் கடந்தவனாகிறான்.

✤ இந்த அண்ட வெளியில் உள்ள இந்த நான்கும் அனைத்தையும் கடந்ததாகிறது. இதில் மனிதனும் ஒருவனாக உள்ளான்.

✤ மனிதன் வையக ஒழுங்கைக் கடைப்பிடிக்கிறான்.

✤ வையகம் விண்ணக ஒழுங்கைக் கடைப்பிடிக்கிறது.

✤ விண்ணகம் தாவோ ஒழுங்கைப் பின்பற்றுகிறது.

✤ தன்னியல்பான இயற்கை ஒழுங்கு விதியை, தாவோ பின்பற்றுகிறது.

இயல் : 26

✤ எளியதை அறியும்போது சுமை எளிதாகும்; சுமை எளியதை அடிப்படையாய்க் கொண்டுள்ளது

✤ அமைதி வேக மிகுதியை அடக்கியாளும் சக்தி. ஞானி நாள் முழுவதும் பயணம் செய்தாலும் புனிதம் என்னும் சுமைவண்டியிலிருந்து அவனைப் பிரிக்கமுடியாது.

✤ பல அதிசயத் தோற்றங்கள் அவனைச் சூழ்ந்திருந்தாலும் அவன் சாந்தமாகவே வாழ்கிறான்.

✤ பத்தாயிரம் தேர்களை உடைய பேரரசன் இதுபோன்ற எளிமையைக் கடைப்பிடித்தால் எப்படி இருக்கும்?

✤ எளிமை, பல தீமைகளின் அடிப்படையை இழக்கக் காரணமாகிறது.

✤ வேகம் என்பது, விவேகம் என்னும் கட்டுப்பாட்டை இழக்கச் செய்யும்.

இயல் : 27

✤ சிறந்த பயணி எந்தவிதமான சுவடுகளையும் விட்டுச் செல்வதில்லை.

✤ சிறந்த பேச்சாளன் எந்தக் குற்றத்தையும் விட்டுச் செல்வதில்லை.

✤ சிறந்த கணித மேதைக்கு எந்தக் கருவியும் தேவையற்றது

✤ சரியாகப் பொருத்துபவனுக்குச் சட்டங்களும் பூட்டும் தேவையற்றவை.

✤ அவனுக்குப் பின்னால் வேறு எவனாலும் அதைத் திறக்கவே முடியாது.

✤ சரியாக இணைப்பவனுக்குக் கயிறும் முடிச்சுகளும் தேவையற்றவை. அவனுக்குப் பின்னால் வேறு எவனாலும் அதனை இணைக்கவே முடியாது.

✤ தீயவர்களாய் இருந்தாலும் அவர்களை ஏன் புறக்கணிக்க வேண்டும்?

✤ ஞானி எப்போதும் மனிதர்களைக் காப்பவனாகவே உள்ளதால் அவன் எந்த மனிதனையும் புறக்கணிக்கத் தேவையில்லை.

✤ அவன் அனைத்தையும் பாதுகாப்பதில் சிறந்தவன். எனவே எதனையும் புறக்கணிக்கத் தேவையில்லை.

✤ இதுவே இரட்டிப்பு ஞானம் எனப்படும்.

✤ நல்லவர்கள் தீயவர்களுக்குப் பயிற்சியாளராய் இருப்பதால்,

✤ தீயவர்கள் நல்லவர்களுக்குப் பயிற்சிப் பொருளாக ஆகிறார்கள்.

✤ அவர்களுக்குத் தங்களது பயிற்சியாளரைச் சரியாகக் கணிக்கமுடியாது.

✤ நல்லவர்கள் தங்களது பயிற்சிப் பொருள்மீது பற்று கொள்வது இல்லை.

✤ இந்த உதவிச்சாதனம், காரண காரியங்கள் மிகப்பெரிய குழப்பத்தை ஏற்படுத்தினாலும்

✤ இது உள்ளார்ந்த நுட்பத்தை காரணமாகக் கொண்டுள்ளது.

இயல் : 28

✤ அவன் ஆண்மையை அறிந்திருந்தாலும் பெண்மையின் படியே நடக்கிறான்.

✤ இயற்கை ஒரு பாதையாக மாறும்போது எல்லா உலகமும் அதனை நோக்கி நகர்கின்றன.

✤ உலகத்தின் பாதையாக இருக்கும்போது அவன் நிலைத்த ஒழுங்குடன் பணிசெய்வது கிடையாது.

✤ பிறகு அவன் சிறுகுழந்தை நிலைக்குத் திரும்புகிறான்.

✤ அவன் வெண்மையை அறிந்திருந்தாலும் கருமையின் படி நடக்கிறான்.

✤ இயற்கை உலகத்தைத் தரப்படுத்துகிறது.

✤ இயற்கை உலகத்தைத் தரப்படுத்தும்போது அவனது நிலைத்த ஒழுங்கு பொய்த்துப் போவதில்லை.

✤ அப்போது அவன் மூல முழுமைக்கு மீண்டும் திரும்புகிறான். அவன் மதிப்பை அறிந்திருந்தாலும் பணிவுடனேயே உள்ளான்.

✤ இயற்கை வெட்டவெளியாக மாறும்போது இதனுள் உலகத்தின் அனைத்துப் பொருட்களும் வந்துசேரும்

✤ இயற்கை வெட்டவெளியானபோது அவனது நிலைத்த ஒழுங்கு முழுமை பெறும்.

✤ அவன் பிறகு மூலமுழுமைக்கே திரும்புகிறான்

✤ மூலமுழுமை பிரியும்போது இயற்கை பயன்படும் பாத்திரமாகத் தோன்றும்.

✤ அப்போது ஞானிகள் அதிகாரிகளாகவும் தலைவர்களாகவும் அங்குப் பணி செய்வார்கள்.

✤ அது ஒரு பெரும் இயக்கமாக இருந்தாலும் அங்கு எந்த வேறுபாடுகளும் தேவையில்லை.

இயல் : 29

✤ மனிதன் தனது எண்ணத்திற்கு ஏற்ப உலகை மாற்றி அமைக்க வேண்டுமெனில்,

✤ அவனுக்குப் பலவிதமான கடுமையான அழுத்தங்கள் ஏற்படும் என்று நான் அறிகிறேன்.

✤ உலகம் என்பது ஒரு புனிதக் கப்பலாக இருப்பதால் அதை நினைத்த உருவமாக மாற்றமுடியாது.

✤ உலகத்தின் மீது எதனையும் வற்புறுத்தவும் முடியாது.

✤ அதை ஒருவன் உருவமாக மாற்றினால் அது உடைந்துவிடும்.

✤ அதன்மீது பலவற்றைத் திணித்தால் அது அதனை இழந்துவிடும்.

✤ ஞானி அதனை மாற்றாமல் விடுவதால் அது உடைந்து விடுவதில்லை.

✤ அதன் மீது அவன் எதையும் திணிக்காததனால் அது அதனை இழந்து விடுவதில்லை.

✤ எனவே பொருட்களுள் சில முன்னோக்கி நடையிடும்போது சில பின்னோக்கியும் நடக்கின்றன.

✤ சிலர் வாயை மூடிக் கொண்டிருக்கும்போது சிலர் அதிகமாகவே பேசிக் காற்றை வெளியேற்றுகின்றனர்.

✤ சிலர் வலிமையாய் இருக்க, சிலர் நோஞ்சானாக உள்ளனர்.

✤ சிலர் இந்த (உலகம் என்னும் புனிதக் கப்பல்) ஊர்தியில் பயணிக்கும்போது, அதே வேளையில் சிலர் விழுந்தும் விடுகின்றனர்.

✤ எனவே ஞானி, அதிகக் குவியல், வரம்பு மீறிய செயல், பேச்சு, அதிக இன்ப நுகர்தல் அனைத்தையும் தவிர்த்து விடுகிறான்.

இயல் : 30

✤ தாவோ மனிதனாக ஒருவன் உலகத்தை ஆளும்போது எந்த ஆயுதங்கொண்டும் ஆள்வது கிடையாது.

✤ அவனது குறிக்கோள் மற்றவரது துயரைக் களைவதுதான் அவனது செயல் மற்றவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு அன்று,

✤ துயர்துடைப்பு முடிக்கப்பட்டவுடன் அவன் அங்கு எந்தத் தற்புகழ்ச்சியையும் கொள்ளமாட்டான். அவனுக்கு ஆணவமும் கிடையாது.

✤ அவன் தனது கடமையாகத்தான் இச்செயலை நினைத்துப் பார்ப்பான்.

✤ ஆயுதங்கொண்டு அல்லாமல் இந்தத் துயர்துடைப்பு நிறைவேறுவதால் இது அவனுக்கு ஏற்படுகிறது.

✤ பொருள்கள் அதிகவலிமை பெற்று உச்சநிலையை அடையும்போது, அவை முதுமை அடையத் தொடங்குகின்றன.

✤ இது தாவோ நிலைக்கு எதிரானது.

✤ எது தாவோ நிலைக்கு எதிரானதாகிறதோ அது முடிவை அடைகின்றது.

இயல் : 31

✤ எவ்வளவுக் கெவ்வளவு ஆயுதங்களுடன் தொடர்பு கொண்டுள்ளதோ அது கெட்ட சகுனத்தின் செயல்பாடு!

✤ அது தாவோ மனிதனின் அமலாக்கம் அல்ல.

✤ ஆயுதங்களைப் பயன்படுத்துவதால் கைமாறாக அதுவேதான் கிடைக்கும். இராணுவ முகாம்கள் உள்ள இடங்களைச் சுற்றி முட்செடிகளும் புதர்களும்தான் வளர்ந்திருக்கும்.

பெரும் போர்கள் அனைத்தும் பஞ்சம் பட்டினியைத் தொடர்ந்து வந்தவையே! தாவோ மனிதன் தன் இல்லத்தில் வாழும்போது அவனது இடப்பாகத்திற்கு மதிப்பளிக்கிறான் (இடப்பாகத்தில் இதயம் உள்ளது; இதயம் அன்பின் அறிகுறி)

அவன் ஆயுதங்களைப் பயன்படுத்தும்போது வலப்பாகத்திற்கு மதிப்பளிக்கிறான் (வலது கை வலிமையை குறிக்கும்.)

தவிர்க்க முடியாத நேரத்தில் மட்டுமே அவன் ஆயுதங்களைப் பயன்படுத்துகிறான். வெற்றியில் அவன் மகிழ்ச்சி அடைவது இல்லை. அப்படி அவன் மகிழ்ந்தால் இதன் பொருள் மனிதனைக் கொலை செய்யும் கொலையாளியாய் இருந்து மகிழ்கிறான் என்பதுதான். அவன் அவ்வாறு இருந்து மகிழ்ந்தால் அது அவனது தீர்மானத்தால் இவ்வுலகத்தில் விளைந்தது என்று கூறமுடியாது.

இயல் : 32

✤ தாவோ எப்போதுமே பெயர் அற்றது.

✤ அதனை முதன்முறையாக இயக்கத்திற்குள் பயன்படுத்தும்போது அது பெயர் பெறுகிறது.

✤ இவ்வாறாக அது பெயரிடப்படும்போது, அதை எங்கே நிறுத்தவேண்டும் என்று தக்கவன் அறிகிறான்.

✤ அதை எங்கே நிறுத்தவேண்டும் என்பதை அறியும் ஒருவன் அழிவதே கிடையாது.

இயல் : 33

✤ ஒருவன் மற்றவரை அறிவதன் வாயிலாகக் கூர் அறிவை அடைகிறான்.

✤ ஒருவன் தன்னை அறிவதால் ஞானமடைகிறான்.

✤ ஒருவன் மற்றவற்றை வென்று வலிமை அடைகிறான்.

✤ ஒருவன் தன்னையே வெல்வதால் பெரும் சக்தி பெறுகிறான்.

✤ மனநிறைவு என்ன என்பதை அறிந்தவனே செல்வந்தன். அவன் சக்தியை அறியும்போது அது அவனது கட்டுப்பாட்டில் இயங்கும்.

✤ அவன் இந்தச் சரியான நிலையிலிருந்து விலகாதபோது அவன் நீண்ட காலம் வாழ்வான்.

✤ அவன் இறக்கக்கூடும்; ஆனால் அவனது நீள்வாழ்வு என்றுமே முடியாது.

இயல் : 34

✤ மிக உயர்ந்த தாவோ இடப்பக்கத்திலும் வலப்பக்கத்திலும் எங்கும் எதிலும் நீக்கமற நிறைந்து உள்ளது.

✤ இதன் வழியாக அனைத்துப் பொருள்களும் உயிரோட்டத்திற்கு வருகின்றன. ஆனால் இது எதையுமே ஒதுக்கிவிடுவது இல்லை.

✤ புகழ் இதனை நோக்கி வருகிறது. ஆனால் இது ஏற்பது இல்லை.

✤ இது அனைத்தையும் அன்புடன் வளர்க்கிறது. ஆனால் அவற்றின் மீது அதிகாரம் செலுத்துவதில்லை.

✤ இது தானே தோன்றியதால் சிறியதாகவே பெயர் ஏற்கிறது.

✤ அனைத்துப் பொருள்களும் தனது வீடாக இதனிடமே திரும்பிச் செல்கின்றன. ஆனால் இது அவற்றுக்கு எஜமானனாக பாவிப்பது இல்லை. இதுவே உயர்ந்த ஒழுங்கு எனப் பெயர் பெறுகிறது.

✤ இது தன்னை அதிக வலிமை உள்ளவனாகக் கருதுவது இல்லை. எனவே இது அதிக வலிமையைப் பெறுகிறது.

இயல் : 35

✤ தாவோ பிரம்மாண்ட உருவமாகவும், அதனுள் அனைத்து உலக அதிசயங்களும் அதனை நோக்கிச் செல்வதாகவும் ஒருவனுக்குத் தெரிகிறது.

✤ அதுபோன்று செல்வதால் எந்த ஆபத்தும் கிடையாது. ஆனால் அமைதி (சாந்தம்), சமநிலை, சமூக ஒழுங்கு எல்லாம் நடைபெறும்.

✤ இசை அதனை கேட்பவரை நிறுத்திவிடும்; சுவை அதனைச் சுவைப்பவர்களை நிறுத்திவிடும்.

✤ ஆனால் தாவோவை வெளிப்படையாகக் கூறுமிடத்து அது மிகவும் தூய்மையானது, நன்மணத்தையெல்லாம் கடந்ததாகவும் இருக்கும்.

✤ ஒருவனால் அதை அவதானிக்குமிடத்து, அவனால் அதைப் பார்க்கமுடியாது.

✤ ஒருவனால் அதைத் கேட்குமிடத்து அதனை அவன் காதுகளால் கேட்கமுடியாது.

✤ ஒருவன் அதனை எப்படியெல்லாம் பயன்படுத்தினாலும், அது சற்றும் சோர்ந்து போவதுமில்லை.

இயல் : 36

✤ ஒன்றை அடைவதற்காக, ஒன்று தன்னை உறுதியாக முதலில் விரிவாக்கிக் கொள்ளும்

✤ ஒன்றை வலிவற்றதாக்க, ஒன்று தன்னை உறுதியாக வலிமைப் படுத்திக் கொள்ளும்.

✤ ஒன்று வெற்றியடைய, ஒன்று தன்னை முதலில் உயர்த்திக் கொள்ளும்.

✤ ஒன்றை எடுத்துக் கொள்வதற்காக, ஒன்று முதலில் உறுதியாக வழங்குவதாக இருக்கும்.

✤ இதுவே உள்ளார்ந்த நுட்பமான அறிவு என்பது.

✤ கடுமையை - வலிமையை மென்மை, எளிமை தோற்கடித்து விடக்கூடும்.

✤ அடிமட்டத்தில் உள்ள மீன் மேல்மட்டத்திற்கு வராதபோது பாதுகாப்படைகிறது.

✤ எனவே மிக நுட்பமாக அமல்படுத்தப்படும் ஒருநாட்டின் சட்டங்கள் மற்ற நாட்டிற்குத் தெரியாதவரை அந்த நாடு பாதுகாப்படைகிறது.

இயல் : 37

✤ தாவோ எப்போதுமே செயலற்றது; இதனால் இதை எந்தச் செயலும் செய்யாது என்று பொருள் கொள்ளக்கூடாது.

✤ இதனை இளவரசர்களும், அரசர்களும் கடைப்பிடித்தால் எல்லாப் பொருள்களும் அதனதன் வழியில் முன்னேற்றமடையும்.

✤ இவை வளர்ச்சியடையும்போது ஆசைகள் அவற்றைக் குழப்பும்.

✤ இதனைச் சாதாரணமான எளிமையைக் கொண்டு தடுப்பேன்.

✤ ஆசைகளிலிருந்து அவை விடுபடும்போது நிம்மதி (ஓய்வு) அடைகின்றன.

✤ இதனைத் தொடர்ந்து உலகமே தன்னைத்தான் சரி செய்து கொள்கிறது.

✤ எளிமை பார்ப்பதற்குச் சிறியதாகத் தெரிந்தாலும், முழு உலகமும் அதனை அடிபணிய வைக்க முடியாது.

✤ இளவரசர்களும் அரசர்களும் இதனைக் கடைப்பிடித்தால் உலகத்திலுள்ள அனைத்துப் பொருள்களும் அவர்களை வணங்கும்.

✤ வானகமும் வையகமும் ஒன்றாக இணைந்து இனிய பனித்துளிகளைப் பொழியும்.

✤ மக்கள் மற்றவருக்குக் கட்டளையிடாமல் தங்களுக்குத் தாங்களே கட்டளையிட்டுக் கொள்ளும்போது ஒருவிதப் பிணைப்பு ஏற்படும்.

✤ மதிப்புகள் உயரும்போது பிரச்சனைகள் முடிவுக்கு வந்துவிடும்,

✤ மக்கள் இயற்கையைப் பின்பற்றும்போது அவர்களது பேச்சுகளும் அவ்வாறே இருக்கும்.

இயல் : 38

✤ உயர் ஒழுங்கு, தன்னை உயர்வானதாக நினைக்காது, எனவே அது உயர் ஒழுங்காக இருக்கிறது.

✤ ஒழுங்கற்றது எப்போதுமே உயர் ஒழுங்கை வெளிப்படுத்தாது! எனவே அது ஒழுங்கற்றதாக உள்ளது.

✤ உயர் ஒழுங்கு பார்ப்பதற்கு செயலற்றதாகத் தோன்றும். ஆனால், அது செயலற்றது என்று பொருள் கிடையாது.

✤ ஒழுங்கற்றது செயல்படும்; ஆனால் அதன் செயல் எதனையுமே செய்யாமல் வந்துவிடும்.

✤ உயர்தர்மம் குறிக்கோள் அற்றுச் செயல்படும்.

✤ உயர்நேர்மை கொள்கையால் செயல்படும்.

✤ உயர்சடங்கு செயல்படும்போது மக்கள் அதைத் தொடக்கத்தில் சட்டைசெய்வது இல்லை.

✤ ஆனால் மக்கள் படிப்படியாகச் சடங்குகளின் சமிக்ஞைகளுக்கு ஏற்பச் செயல்பட ஆரம்பிக்கிறார்கள்.

✤ எனவே, தாவோ இல்லாதபோது நல் ஒழுங்கு தொடரப்படும்.

✤ நல்ஒழுங்கு இல்லாதபோது உயர்தர்மம் தொடரப்படும்.

✤ உயர்தர்மம் இல்லாதபோது, உயர் நேர்மை தொடரப்படும்.

✤ உயர்நேர்மை இல்லாதபோது, உயர்சடங்கு செயல்படும். இவ்வாறாக, சடங்குகள் செயல்படும்போது அங்கு

வாய்மை, நம்பிக்கைகளும் தளர்ந்து குழப்பம் தொடர ஆரம்பிக்கும்.

✤ ஆரம்ப அறிவு தாவோவின் மலரைப்போன்றது, அதன் ஆரம்பம் முட்டாள்தனமானது.

✤ எனவே உண்மையில் உயர்ந்தவர்கள் உடையக்கூடியதைத் தொடராமல் திடமானதைப் பின்பற்றுகிறார்கள்.

✤ அவன் பழத்தை எடுத்துக் கொண்டு மலரை விட்டுவிடுகிறான்.

✤ இப்படியாக அவன் முன்னால் உள்ளதை எடுத்துக் கொண்டு - பின்னால் உள்ளதைத் தள்ளிவிடுகிறான்.

இயல் : 39

✤ முன்னாளில் அனைத்துப் பொருட்களும் கீழ்க்கண்டவாறு இணைந்தன.

✤ வானகம் ஒன்றானபோது தெளிவடைந்தது.

✤ வையகம் ஒன்றானபோது நிலையடைந்தது.

✤ ஆன்மா ஒன்றானபோது புனிதமடைந்தது.

✤ வெட்டவெளி ஒன்றானபோது முழுமையடைந்தது.

✤ அனைத்தும் ஒன்றானபோது படைப்பு தோன்றியது.

✤ இளவரசர்களும் அரசர்களும் ஒன்றானபோது உலக ஆட்சியாளர்கள் தோன்றினர்.

✤ வானகம் தெளிவற்றதானால் அதில் சிலகாலம் மட்டுமே இருக்கமுடியும்.

✤ வையகம் சமநிலையில்லாது போனால் அது தலைகீழாக விழுந்துவிட்டிருக்கும்.

✤ ஆன்மா இயங்கவில்லையெனில் அதுவெளியில் சென்றுவிடும்.

✤ வெட்டவெளி முழுமையடையாதபோது அது உலர்ந்து விட்டிருக்கும்

✤ அனைத்தும் படைப்பில் தோன்றாவிடத்து அது அழிந்துவிட்டிருக்கும்

✤ இளவரசர்களும் அரசர்களும் ஆள்பவராக இல்லாதபோது அவர்கள் தூக்கி யெறிப்படுவார்கள்.

✤ பெருந்தன்மையென்பது பணிவு என்னும் பொருளால் அலங்கரிக்கப்பட்டது.

✤ உயர்ந்தது என்பது பணிவை அடிப்படையாகக் கொண்டது.

✤ உயர்ந்த புகழ் என்பது எந்தப் புகழையும் கொண்டிராதது.

✤ அரசர்கள் புகழை ஏற்காதபோது புகழப்படுகிறார்கள்.

✤ அவர்கள் புகழை ஏற்கும்போது இகழப்படுகிறார்கள்.

✤ மிகச் சிறந்த வைரத்தைச் சரியாக மதிப்பிட முடியவில்லையெனில், அது ஒரே மாதிரியான எண்ணிறந்த கண்ணாடிக் கல்லைப் போலவேதான் தெரியும்.

இயல் : 40

✤ திரும்ப வருவது தாவோவின் இயக்கம்

✤ அல்லாததைக் குறையச்செய்து பாதுகாப்பது தாவோவின் பயன்பாடு.

✤ பேரண்டத்தில் உள்ள அனைத்துப் பொருள்களும் முழுப் படைப்பிலிருந்து வருகின்றன.

✤ முழுப்படைப்பும் அநாதியிலிருந்து வருகின்றது.

இயல் : 41

✤ தாவோவைப் பற்றிப் பேசும் சிறந்த அறிஞருக்கு அதனைப் பயிற்சி செய்யக் கடினமாய் உள்ளது.

✤ தாவோவைப் பற்றி பேசும் இடைநிலை அறிஞர், சில நேரங்களில் அதனைக் கடைப்பிடிக்கிறார்; சிலநேரங்களில் மறந்தும் விடுகிறார்.

✤ தாவோவைப் பற்றிப் பேசும் கடைநிலை அறிஞர் வாய்விட்டுச் சிரிக்கிறார்.

✤ இதுகுறித்துச் சிரிக்கவில்லையெனில், அது தாவோவிற்குச் சற்றும் பொறுத்தமற்றது என்றே சொல்லலாம்.

✤ பழமொழி யெனக் கூறுவது இதுதான்.

✤ ஞானமென, தாவோவை நோக்குவது தவறானது.

✤ வளர்ச்சியென, தாவோவை நோக்குவது வளைவானது.

✤ மிக உயர்ந்த ஒழுங்கு, பார்ப்பதற்கு வெட்டவெளிபோல் தோன்றும்.

✤ சுத்தமான வெண்மை, நிறமற்றதாகவே தோன்றும்.

✤ மிகமிக உயர்ந்த அற்புதமான ஒழுங்கு பார்ப்பதற்கு பொருத்தமற்றுத் தோன்றும்.

✤ மிகத்திடமானது பார்ப்பதற்கு எளிதில் சிதறக்கூடியதாகத் தோன்றும்.

✤ எளிய இயற்கை பார்ப்பதற்கு மாற்றமுடையதாகத் தோன்றும்.

✤ மிக உயர்ந்த சதுரம் எந்தக் கோணத்தையும் கொண்டிருக்காது.

✤ மிகப்பெரிய பாத்திரம் எப்போதும் நிரம்பியே இருப்பதில்லை.

✤ மிகமிக அதிகமான சத்தம் காதுகளுக்குக் கேட்காமலே போகும்.

✤ மிகப்பெரிய உருவம் கண்களால் காணமுடியாது.

✤ தாவோ மறைந்திருக்கும் அதேவேளையில் அதுபெயர் அற்றதாகிறது.

✤ ஆனால் தாவோ மட்டுமே நல்லபடி பகுக்கமுடியாதபடி முழுமையானதாய் உள்ளது.

இயல் : 42

✤ தாவோ ஒன்றைத் தோற்றுவிக்கிறது. ஒன்று இரண்டைத் தோற்றுவிக்கிறது. இரண்டு மூன்றைத் தோற்றுவிக்கின்றன. அனைத்துப் பொருள்களும் ஒளியின் முன்னால் இருக்கும்போது முன்பாகம் வெளிச்சமாகவும் (Yang) அதன் பின்பக்கம் நிழலாகவும் (Yim) உள்ளது. இது அருவரூபமான சுவாசத்தால் ஏற்று இசைவாக அமைக்கப்படுகிறது.

✤ மற்றவர் என்ன போதித்தனரோ அதையேதான் நானும் போதிக்கிறேன்.

"மோசக்காரர்கள், கொடுங்கோலரது இறப்பு இயற்கையாய் இருக்காது" என்ற பழமொழியையே நான் எனது ஆசிரியராய் ஏற்றுக் கொண்டுள்ளேன்.

இயல் : 43

✤ அநாதியானது, நுழைய முடியாதவற்றில்கூட நுழைந்து வந்துவிடும்.

✤ இவ்வழியாக - வினையற்றுச் சும்மா இருப்பது பயன்படக்கூடியது என்று அறிந்தேன்.

✤ சொற்களற்ற போதனை, சும்மா இருப்பதால் பயன், இதுபோன்ற சில சங்கதிகள் இவ்வுலகத்தில் இவற்றுடன் வந்துள்ளன.

இயல் : 44

✤ புகழ் அல்லது உங்கள் மனிதர், இவற்றில் எது உங்கள் அருகில் உள்ளது?

✤ உங்கள் மனிதர் அல்லது செல்வம் இவற்றில் எது உங்களுக்கு அதிக நெருக்கமாக உள்ளது?

✤ பெறுவது அல்லது கொடுப்பது இவற்றில் எது உங்களுக்கு அதிகத் துன்பத்தைக் கொடுக்கிறது?

✤ அதிகமாக விரும்பப்படும் பொருட்கள், வீணான செலவில்தான் கொண்டுபோய்ச் சேர்க்கும்.

✤ வியக்கத்தக்க செல்வம் பயங்கரக் கொள்ளையில் முடியும்.

✣ எனவே, திருப்தி என்ன என்பதை உணர்ந்தவனை எதுவுமே துன்பம் செய்யாது.

✣ அதனை எங்கு நிறுத்தினால் துன்பம் கிடையாது என்பதை ஒருவன் அறிவான்

✣ அவன் என்றும் அழிவற்று வாழ்வான்.

இயல் : 45

✣ உயர்ந்த பூரணத்துவம் குறைவுடையதாகத் தோற்றமளிக்கலாம்; இருப்பினும் அதன்பயன்பாடு அழியாமல் தொடர்ந்து வளரும்.

✣ உயர்ந்த முழுமை வெறுமையாகத் தோற்றமளிக்கலாம். இருப்பினும் அதன் பயன் வெறுமையாவதில்லை.

✣ உயர்ந்த நேர்மை கோணலாகத் தோன்றலாம்.

✣ உயர்ந்த திறமை அருவருப்பாகத் தோன்றலாம்.

✣ உயர்ந்த சொல்வன்மை திக்கிப் பேசுவதாகத் தோன்றலாம்; செயல்திறன் குளிர்ச்சியைப் போக்கும் (சுறுசுறுப்பைத்தரும்.)

✣ அமைதி வெம்மையை வெற்றி கொள்ளும்

✣ தூய்மை, அமைதி ஆகியவற்றால் மட்டுமே உலகை ஆட்சி செய்ய முடியும்.

இயல் : 46

✣ தாவோ இவ்வுலகத்தை ஆளும்போது, விரைவாக ஓடும் குதிரை வயல்நிலத்தில் சாணவண்டியை இழுக்கப் பயன்படுத்தப்படும்.

✣ தாவோ இவ்வுலகத்தை ஆளாதபோது பொதுவாக விரைவாக ஓடும் போர்க்குதிரை நகரத்திற்கு வெளியில் உணவூட்டி வளர்க்கப்படும்.

✣ ஆராய்ந்து பார்த்தால், மனிதனின் ஆசையைக் காட்டிலும் மிக மோசமான குற்றம் ஏதும் இல்லை.

✣ மனநிறைவற்ற தன்மையைக் காட்டிலும் துன்பமானது வேறு எதுவும் இல்லை.

✣ பேராசையைக் காட்டிலும் மிகவும் மோசமான பேரழிவு இல்லை.

✣ மனநிறைவை அறியும் மனமே அனைத்தையும் தரவல்லது.

இயல் : 47

✣ வெளிவாசல் செல்லாமலே ஒருவன் அனைத்து உலகையும் அறிந்தவனாக இருக்கமுடியும்.

✣ ஜன்னல் வழி உற்றுப் பார்க்காமலேயே ஒருவன் வானகத்தின் தாவோவைக் காணமுடியும்.

- அதிகம் பயணிப்பவன் குறைவானவற்றைக் காண்கிறான்.

- எனவே ஞானி பயணிக்காமல் எல்லாவற்றையும் அறிகிறான்.

- அவன் எதையும் பார்க்காமல் அனைத்திற்கும் பெயரிடுகிறான்.

- அவன் எதுவும் செய்யாமலேயே அனைத்தையும் அடைகிறான்.

இயல் : 48

- அறிவைத் தொடரும்போது அது ஒவ்வொரு நாளும் அவனுக்கு வளர்ந்துகொண்டே செல்கிறது.

- தாவோவைத் தொடரும்போது அவனுக்கு அது ஒவ்வொரு நாளும் குறைந்துகொண்டே வந்துவிடுகிறது.

- அவன் செயலற்ற தன்மையை அடையும்வரை அது படிப்படியாகக் குறைந்துகொண்டே வருகிறது.

- அவனது செயலற்ற தன்மையில் அனைத்தும் நிறைவேற்றப்பட்டிருக்கும்.

இயல் : 49

- ஞானி, நான் என்ற முனைப்பு அற்றவன்!

- அவன் மக்களது தன்னல முனைப்பையே தன் முனைப்பாக ஏற்கிறான்.

- நல்லதற்காக நல்ல தன்மையுடன் செயலாற்றுகிறேன்

- தீயதற்காகவும் நல்ல தன்மையுடன் செயலாற்றுகிறேன்

- இவ்வாறாக நல்லதன்மை அடையப்படுகிறது.

- நம்பிக்கைக்காக நம்பிக்கையுடன் பணிசெய்கிறேன்.

- அவநம்பிக்கைக்காகவும் நம்பிக்கையுடன் பணி செய்கிறேன்.

- இவ்வாறாக நம்பிக்கை அடையப்படுகிறது.

- ஞானி இவ்வுலகத்தில் இசைவுடனும் எளிமை என்னும் சட்டத்துடனும் ஆட்சி செய்கிறான்.

- எல்லா மக்களும் காதுகளையும் கண்களையும் வேறு பக்கம் கொண்டு நோக்கினாலும், ஞானி, ஒரு தாய் தனது குழந்தைகளைப் பார்ப்பது போலவே பார்க்கிறான்.

இயல் : 50

✤ மனிதன் வாழ்வைவிட்டுச் சென்றபிறகு இறப்பினுள் நுழைகிறான்.

✤ வாழ்வுப் பகுதியின் விகிதம் பத்தில் மூன்று; இறப்புப் பகுதியின் விகிதமும் பத்தில் மூன்று. மனிதன் பிறந்ததிலிருந்த இறப்பு வட்டாரம் நோக்கிச் செல்லும் வரை விகிதம் பத்தில் மூன்றுதான். ஏன் இது இவ்வாறு உள்ளது?

✤ ஏனெனில், அவர்களது மிகையான முயற்சிகள் யாவும் வாழ்வைப்பற்றி ஆய்வதிலேயே உள்ளதாக இருப்பதால்தான்.

வாழ்வுக்காக ஏதோ செய்து கொண்டிருப்பவர்களைவிட ஒன்றுமே செய்யாதவர்கள் மேலானவர்கள்.

ஒருவன் தன் வாழ்வை எவ்வாறு பாதுகாக்கிறான் என்பதைக் கீழ்க்கண்டவற்றால் அறிந்தால், அவன் நிலத்தின் மீது பயணப்படும்போது காண்டா மிருகத்தையோ, புலியையோ சந்தித்ததே கிடையாது. அவனைப் போர்க்களத்தில் ஆயுதங்களோ, கொடூரமான தளவாடங்களோ தாக்குவது கிடையாது.

காண்டா மிருகம் தனது கொம்புகளால் தாக்குமிடம் எது என்று அறியாது. புலி தனது கூரிய நகத்தால் தாக்க எந்த இடம் என்று அறியாது. கொடும் ஆயுதங்களும் தங்களது கத்தியால் தாக்குவது எந்த இடம் என்று அறியாது.

ஏன் இவ்வாறு உள்ளது? ஏனெனில் அவன் இறப்பு எனும் வட்டாரத்திற்குத் தாண்டி உள்ளான் என்பதுதான்.

இயல் : 51

✤ தாவோ அனைத்தையும் தோற்றுவிக்கிறது.

✤ நல் ஒழுங்கு அவற்றைச் சீராட்டி வளர்க்கிறது.

✤ பொருட்கள் வெவ்வேறு உருவங்களில் தோன்றுகின்றன.

✤ அவைகளுக்கு அளிக்கப்பட்ட சக்தியால் அவை நிறைவாய் உள்ளன.

✤ இவற்றுள் பல பொருட்கள் தாவோவைப் பாராட்டுவதோ நல்ஒழுங்கை மதிப்பதோ இல்லை.

✤ சில தாங்களாகவே எந்தக் கட்டளையுமற்று, தாவோவைப் பாராட்டுகின்றன. நல்ஒழுங்கை மதிக்கின்றன.

✤ தாவோ அனைத்தையும் தோற்றுவித்து வளர்க்கிறது, உணவளிக்கிறது, இடமளிக்கிறது, உயர்வடையச் செய்கிறது, பாதுகாக்கிறது.

✤ எல்லாப் பொருட்களும் உயிர்வாழ வரும்போது தாவோ எதனையுமே தள்ளுவது கிடையாது.

✤ அவற்றைத் தோற்றுவிப்பதால் அதன்மீது உரிமை கொண்டாடுவதும் கிடையாது.

✤ பாரபட்சமற்றுத் தாவோ செயலாற்றுகிறது.

✤ எவற்றின்மீதும் அதிகாரம் செலுத்தாமல் உயர்த்துகிறது; புகழ் இதனை நாடிவரும்போது அதற்கு உரிமை பாராட்டுவது இல்லை.

✤ அவற்றின் மீது உரிமை கொண்டாடவில்லை என்பதற்காக அவற்றைக் கைவிட்டுவிடுவதும் இல்லை.

இயல் : 52

✤ ஆதியில் இப் பேரண்டம் தோற்றத்திற்கு வந்தபோது அது அதனது தாயைப் போன்றே இருக்கலாம்.

✤ மனிதன் தாயைக் கண்டவிடத்து அதன் சேயையும் அறிவான்.

✤ அவன் சேயை அறிந்திருந்தும் அவன் இன்னும் தாயால் காக்கப்படுகிறான்.

✤ இவ்வாறாக அவனது உடல் அழிந்தாலும் அவன் எப்போதும் அழிவதில்லை.

✤ அவன் வாயை மூடினாலும் வாசல்களைச் சாத்தினாலும் அவன் எப்போதுமே களைப்படைவதில்லை.

✤ மிகச் சிறியவற்றையும் பார்க்கமுடியும் என்றால் அது தெளிவான பார்வை என்று அழைக்கப்படும்.

✤ எது குறைவானது என்பதை அறிந்து பாதுகாக்கும் போது அதுசக்தி, என்று அழைக்கப்படும்

✤ உங்களது ஒளியைப் பயன்படுத்துங்கள்; ஆனால் உங்களது வெளிச்சம் சற்று மங்கலாகவே இருக்கட்டும்.

✤ இப்படி இருந்தால் உங்களுக்கு எந்தக் கெடுதியும் இல்லை. இதுவே அழிவற்ற தாவோவைப் பின்பற்றுதல் எனப்படும்.

இயல் : 53

✤ தெளிந்த ஞானத்தால் நான் பெரும் பாதையின் மீது நடக்கிறேன்.

✤ நான் பயப்படுவதெல்லாம் அதனைவிட்டு விலகாதிருக்கத்தான்,

✤ பெரும்பாதை மிகத் தெளிவாகவும் எளிதாகவும் உள்ளது.

✤ மக்கள் தேர்ந்தெடுப்பதோ குறுக்கு வழியைத்தான்! அரச மாளிகைகள் மிக அதிகமாகவே கவனமாகப் பாதுகாக்கப்ப்டும். அதே வேளையில், விளைநிலங்களில் களைகள் மண்டிக்கிடக்கின்றன.

✤ தானியக்கிடங்குகள் வெறுமையாய் உள்ளன.

✤ பகட்டான பெரும் பணக்காரன், அழகிய பூவேலைப் பாட்டு ஆடைகளை அணிகிறான்.

✤ கூர்மையான உடை வாளைக் கொண்டுள்ளான்.

✤ அதிகமாகச் சாப்பிட்டு குடித்துக் கும்மாளமிடுகின்றனர்.

✤ அதிக செல்வத்தைக் குவித்து வைத்துள்ளனர்.

✤ இவை கொள்ளைக்காரர்களை ஊக்கப்படுத்துகின்றன; இது தாவோ வழிக்கு விலகிய வழிதானே?

இயல் : 54

✤ கைதேர்ந்த தோட்டத் தலைவன் எதனைப் பயிரிடுகிறானோ அதனை எளிதில் அகற்றிவிட முடியாது.

✤ மென்மையாக ஆரத்தழுவுபவன், எதனை ஆரத் தழுவுகிறானோ அங்கு எந்த இடைவெளியும் ஏற்படாது.

✤ இவ்வாறாக அவனது குழந்தைகளும், பேரக் குழந்தைகளும் அவனது தொடர்ந்த மூதாதையர் அர்ப்பணிப்பால் முடிவற்றுப் பரம்பரையாக வளர்ந்து வருகின்றனர்.

✤ அவன் தாவோவை அடைய முயற்சிக்கும்போது அவனது நல்ஒழுங்கு புதுமையாக அமையும்.

✤ அவன் இதனைக் குடும்பத்தினுள் புகுத்தும்போது அவனது நல்ஒழுங்கு பெரும் செல்வமாக மாறும்.

✤ அவன் தனது கிராமத்தில் இதனைப் பயன்படுத்தும் போது அவனது ஒழுங்கு நிலையானதாகிறது.

✤ அவன் தனது நாட்டிற்கு இவ்வழியைப் பயன்படுத்தும்போது அவனது ஒழுங்கு முழுமையடைகிறது.

✤ அவன் இதை உலகத்திற்குப் பயன்படுத்தும்போது அவனது ஒழுங்கு எல்லாவற்றையும் உட்படுத்தியதாகிறது.

✤ எனவே ஒன்று, ஒன்றின் மனிதனாகப் பலரை கவனிக்கும்.

✤ ஒன்று, ஒன்றின் குடும்பமாகப் பல குடும்பங்களைக் கவனிக்கும்.

✤ ஒன்று ஒன்றின் கிராமமாகப் பல கிராமங்களைக் கவனிக்கும்.

✤ ஒன்று ஒன்றின் நாடாகப் பல நாடுகளைக் கவனிக்கும்.

✤ ஒன்று ஒன்றின் உலகமாகப் பல உலகங்களைக் கவனிக்கும்.

✤ இந்த உலகம் தாவோவினால் ஆட்சி செய்யப்படுகிறது என்று எப்படி நான் அறிந்தேன் தெரியுமா? கூர்ந்து கவனித்ததனால்தான்.

இயல் : 55

- உயர்ந்த ஒழுங்கை இயற்கையாகப் பெற்றவன் ஒரு சிறு குழந்தையைப் போன்றவன்.
- கொடிய நஞ்சுள்ள பூச்சிகள் அவனைத் தீண்டுவதில்லை.
- கொடிய விலங்குகள் அவனைத் தாக்குவதில்லை.
- கொடிய பறவைகள் அவனைத் தடுப்பதுமில்லை.
- அவனது எலும்புகள் மென்மையானவை; அவனது தசைகள் நெகிழ்வானவை; ஆனால் அவனது பிடிப்புகளோ உறுதியானவை. அவன் ஆண் பெண் பேதம் பார்ப்பதில்லை. ஆனால் அவன் பால் வளர்ச்சியில் மேம்பட்டவன்.
- அவன் மிக்க வலிமை உடையவன் என்பது இதன் பொருள்.
- அவன் நாள் முழுதும் சத்தமிட்டாலும் அவனது குரல் கரகரப்பாக மாறுவதில்லை. இதன் பொருள், அவன் பூரணத்துடன் ஒத்துள்ளான் என்பதே.
- என்றும் அழிவற்றதை அறிந்திருந்தால் ஞானமடையலாம். வாழ்வை நீடிக்கச் செய்யும்போது அது அழிவில் கொண்டுபோய்ச் சேர்க்கும்.
- இதயத்தைக் கொண்டு மூச்சு விடும்போது முழுமை அடைய முடியும்.

இயல் : 56

- அறிந்தவன் பேசிக் கொண்டிருக்கமாட்டான்.
- அறியாதவன் பேசுவான்.
- பாத்திரத்தின் வாயிலைச் சுற்றி மூடுங்கள்.
- புலன்களின் வாசல்களையும் மூடுங்கள்.
- கூர்மையிலிருந்து விடுபட்டுச் செயலற்றுச் சும்மா இருங்கள்.
- சிக்கலிலிருந்து சிக்கலற்று இரு.
- ஒளியுடன் ஒத்திரு.
- அகங்காரம் விட்டுப் பணிந்திடு.
- இதுதான் மறைபொருளுடன் ஒன்றுபடும் முறை.
- மனிதர்கள் இதனை அடையும்போது விருப்பு வெறுப்புக்கு மேலான நிலையையும், செல்வம் வறியநிலையைக் கடந்தும், உயர்வு தாழ்வு நிலைக்கு மேலான நிலையை அடைகின்றனர். எனவே அவர்கள் உலகோரால் வெகுவாகப் பாராட்டப் படுகிறார்கள்.

இயல் : 57

✤ நீதியின்படி நாடு ஆளப்படும்போது, போர் இராஜதந்திரம் அங்கு இல்லை.

✤ ஒருவன் பேரரசை ஆளும்போது பலவிதச் செயல்களில் தலையிட்டுக் கொண்டிருக்க மாட்டான்.

✤ பேரரசன் பலவிதச் செயல்களில் தலையிடாமல் இருந்தால்தான் பேரரசை ஆளமுடியும்.

✤ அல்லது அதனை ஆளவே முடியாது. இதனை எப்படியெல்லாம் அறிந்தேன் தெரியுமா? இப்படியாகத்தான்:-

✤ ஒரு பேரரசு அதிகக் கட்டுப்பாடுகளைக் கொண்டும் சரியாகக் கவனிக்கப்படாமலும் இருக்கும்போது ஏழைமக்கள் மேலும் ஏழைகளாவார்கள்.

✤ மக்கள் மீது மிகக் கூர்மையானவற்றை அமல் படுத்தும்போது நாட்டில் குழப்பம் நிலவும்.

✤ அதிகமான கலைகளும் கலைஞர்களும் மலிந்தபோது ஏராளமான அதிசயப்பொருள்கள் உண்டாக்கப்படும்; அதிகமான சட்டதிட்டங்கள் உண்டாக்கப்படும்.

✤ அப்போது அங்கு அதிகமான கொள்ளைக்கூட்டமும் திருடர்களும் பெருகுவார்கள்.

✤ ஞானியின் கூற்று இதுதான்.

✤ நான் செயலற்றுச் சும்மா இருக்கும்போது மக்கள் வளர்ச்சி அடைவார்கள்.

✤ நான் அமைதியை நேசிக்கும்போது மக்கள் நேர்மையாக, இருக்க முயல்வார்கள், நான் வீண் சந்தடி செய்யாமல் இருக்கும்போது மக்கள் செல்வந்தர்களாக இருப்பார்கள்.

✤ நான் பற்றற்று இருக்கும்போது மக்கள் எளிமையாகவே இருப்பார்கள்.

இயல் : 58

✤ அரசு ஒளிவுமறைவற்றுச் சும்மா இருக்கும்போது மக்கள் மகிழ்ச்சியும் முன்னேற்றமும் அடைவார்கள்.

✤ அரசு இதற்கு எதிராக இருக்கும்போது அமைதியற்று மனக்குறைவுடன் இருப்பார்கள்.

✤ கடுந்துயரம் ஓங்கும்போது அங்கு மகிழ்ச்சி ஓய்வு கொள்ளும்.

✤ மகிழ்ச்சி அமையும்போது அங்குத் துயரம் படுத்துவிடும்.

✤ யாருக்குத்தான் மேலான ஆட்சியைப் பற்றித் தெரியும்?

✤ அரசு எல்லாவற்றையும் மாற்றிக்கொண்டிருக்காத நிலையில் இது சாத்தியப்படும்.

✤ இல்லாவிட்டால் மாற்றம் ஏற்பட்டு, சூழ்ச்சித் திறம் அதிகமாகும்.

✤ நல்லவை தீயவையாக மாறும்.

✤ பன்னெடுங் காலமாக மனிதர்கள் இதனை அறியாதவர்களாக இருந்தார்கள்.

✤ ஞானி முட்டாள் போன்று இருப்பதால் அவன் யாரையும் வெட்டுவதில்லை.

✤ அவன் ஒரு கோணத்தில் இருப்பதால் மற்றவர்களை விழுங்குவதில்லை.

✤ அவன் நேராக இருப்பதால் மற்றவரை அதற்கு இழுப்பதில்லை.

✤ அவன் ஒளியாய் இருப்பதால் மற்றவரைக் கண்கூசச் செய்வதில்லை.

இயல் : 59

✤ மனிதனை ஆண்டாலும் வானகத்தில் பணிசெய்தாலும் ஞானி சமநிலையைத்தான் பயன்படுத்துகிறான்.

✤ சமநிலையால் மட்டுமே தாவோவை அடையாளம் காணலாம். தாவோவின் உறுதி நிலை, பயங்கரமாகக் குவிந்த ஒழுங்கு நிலையைக் கொண்டது.

✤ பயங்கரமாகக் குவிந்த ஒழுங்கு என்பது வேறு ஒன்றும் இல்லை; அதனை ஒருவன் வெல்லமுடியாது என்பதுதான். அவனை வெல்லமுடியாது என்பது வேறு ஒன்றும் இல்லை; அவனது மேலாண்மையை ஒருவன் அறியாது இருப்பதே.

✤ அவனது மேலான ஆட்சியை யாரும் அறியாமல் இருக்கும்போது நாடு அவனுக்குச் சொந்தம்.

✤ அவன் ஒரு தாயைப் போலத் தன்னை உணர்ந்து ஒரு நாட்டை எடுத்துப் பணி செய்வதால் அவன் பண்னெடுங்காலம் நிலைத்திருக்கிறான்.

✤ இதன்பொருள் என்னவெனில் அவன் என்றும் இறப்பற்று இருக்கவும் நீள்வாழ்வு வாழும் ஒரு வழியை ஆழமாகவும் உறுதியாகவும் அடிப்படையில் தெரிந்து வைத்திருக்கிறான் என்பதுதான்.

இயல் : 60

✤ உயர்நிலை ஆட்சிசெய்யும்போது நீ ஒரு சிறிய மீனைக்கூட எளிதாகச் சமைத்துவிடுவாய். (எதையும் எளிதில் செய்யலாம்.)

✤ தாவோ இவ்வுலகத்தை ஆட்சி செய்ய வரும்போது எந்தப்பேயும் தனது பேய்ச்சக்தியைக் காண்பிக்காது.

✤ அந்தப் பேய்களுக்கு எந்தச் சக்தியும் இல்லை என்று பொருள் கிடையாது.

✤ அவற்றின் சக்தி மனிதர்களைத் துன்பப்படுத்தாது என்பதுதான்.

✤ அவைகளும் மனிதர்களுக்குத் துன்பம் செய்யா. ஞானிகளும் மக்களுக்குத் துன்பம் செய்யமாட்டார்கள்.

✤ உயர்நிலை ஆட்சி உள்ளபோது ஒன்றுக்குள் ஒன்று துன்பம் செய்யாது.

✤ எனவே அங்கு அவைகளுக்குள் ஓர் உயர்ந்த ஒழுங்கு நிலவும்.

இயல் : 61

✤ உயர்நிலை என்பது உலகத்தின் தாழ்ந்த நீரோட்டமாகவும் (இது தாழ்வாக இருப்பதால் எல்லா ஆறுகளும் இதில் வந்து கலக்கின்றன), உலக நிலமாகவும், உலகத்தின் பெண்மையாகவும் தோன்றுகிறது.

✤ பெண் எப்போதும் பணிவாக இருப்பதால் அமைதியாகிறாள்; பெண்மையின் அமைதியான தன்மை ஆண்மையைத் தோற்கடித்துவிடும்.

✤ உயர்நிலை சிறிய நிலையைத் தனதாக்கிக் கொள்வதற்கு முன்னால் அது சிறிய நிலையின்முன் பணிவாக நடந்து கொள்கிறது. சிறிய நிலை உயர்நிலையைத் தனதாக்கிக் கொள்வதற்கு முன் அது உயர்நிலையின் முன் பணிவாக நடந்துகொள்கிறது.

✤ எனவே சில பணிவதால் பெறுவதாகவும், சில பணிவதால் ஒன்றாகியும் விடுகின்றன.

✤ உயர்நிலை தன்னிடம் உள்ளவற்றிற்கு மேலாக எதனையும் பெற ஆசைப்படுவதில்லை; அது பல மக்களைக் காக்கிறது.

✤ சிறிய நிலை பலவற்றைப் பெற ஆசைப்படுவதற்கு மேல் வேறு எதையும் பெற ஆசைப்படுவதில்லை

✤ மிகப்பெரிய ஒன்று பணியும்போது இரண்டின் சராசரி ஆசைகளும் நிறைவேற்றப்படும்.

இயல் : 62

✤ அனைத்தின் மூலம், தாவோ ஆகும். இது நல்லவர்களுக்குக் கருவூலமாகவும், தீயவர்களைத் தாங்குவதாகவும் உள்ளது.

✤ பேரரசராய் முடி சூடப்பட்டுக் குதிரைமேல் வந்து பல அணிகலன்களை அளித்தாலும், மூன்று அமைச்சர்கள் குதிரையில் வந்து பல அணிகலன்களை அளித்தாலும், ஒருவன் அமர்ந்துகொண்டு தாவோவை விவரிப்பதற்கு ஈடாகாது.

✤ ஏன் நமது முன்னோர்கள் இந்த தாவோவைப் போற்றினார்கள்?

✤ தேடுவதால் கிடைக்கும் அல்லது பாவிகள் விடுதலை அடைவார்கள் என்ற காரணத்தினால் அல்ல என்பது மட்டுமல்லதானே?

✤ இக்காரணத்தினால் இது உலகத்தின் விலைமதிப்பற்ற பொருளாக உள்ளது.

✤ நல்ல சொற்கள் ஒருவனை உயர்த்தும், நல்ல செயல்கள் ஒருவனுக்குச் செல்வத்தைப் பெறும்படிச் செய்யும்.

இயல் : 63

✤ சும்மா இருங்கள். கைகொள்ளாததைக் (இயற்கையை) கைக்கொள்க. சுவையற்றதை (இயற்கையைச்) சுவைத்திரு.

✤ ஞானி பற்று அற்றதில் பற்று வைக்கிறான் அவன் பெறுவதற்கு அரிய பொருளற்றதை(On - thing)ப் பாராட்டுகிறான்.

✤ அவன் அறியாததை அறிகிறான். மற்றவர்கள் இதன் வழி வந்ததைத் திரும்பப் பார்க்கிறான்.

✤ இவ்வாறாக அவன் எல்லாப் பொருட்களும் அதனதன் இயற்கைப் பாதையில் வளர அனுமதியளிக்கிறான்.

✤ அவன் அதில் எந்த சாகசச் செயலும் செய்வதில்லை.

✤ சிறியவை உயர்வாய் இருப்பதையும், சில என்பதே பலவாக இருப்பதையும் கவனித்துப்பார்.

✤ எளிதானதாக இருக்கும்போது அதன் கடினத்தைச் சரிசெய்.

✤ சிறியவையாக இருக்கும்போது அதன் உயர்வைச் சரிசெய்.

✤ உலகத்தில் உள்ள எல்லாக் கடினமான பொருள்களும் எளிதானவற்றிலிருந்து வந்தவையே.

✤ மனிதன் கையில் உள்ள மரத்துண்டு மரத்தின் மென்மையான கிளையிலிருந்து துளிர்த்ததுதான்.

✤ ஒன்பது மாடிக் கோபுரம் பூமியின் அடிக்குவியலிலிருந்து தோன்றியது.

✤ ஆயிரம் மைல் பயணம் முதல் பாத அடியிலிருந்து ஆரம்பமாகிறது.

✤ அரிய பொருள்களை ஞானி குவிக்காததால் அவன் உயர்ந்ததைச் சாதிக்கிறான்.

✤ எளிதில் அளிக்கப்படும் உறுதி அரிதாகத்தான் காப்பாற்றப்படும்.

✤ எளிதில் கிடைக்கும் பொருள்கள் ஒருவனுக்கு அதிகத் துன்பத்தைத் தரும்.

✤ எனவே ஞானி பொருள்களைத் துன்பம் என்று கருதுவதால் அவனுக்குத் துன்பம் தொடர்வதில்லை.

இயல் : 64

✤ எது இயக்கமற்றதோ அதைப் பெறுவது எளிதானது, மனஉறுத்தல் அற்று வகுக்கப்படும் திட்டங்கள், வகுக்க எளிதானவை.

✤ எது அற்பமோ அது எளிதில் உடையக்கூடியது.

✤ எது மிகச் சிறியதோ அது எளிதில் பரவக்கூடியது.

✤ ஒரு பொருள் உயிரோட்டத்திற்கு வரும்முன்பே அதனை நன்கு தீர்மானித்துவிடு.

✤ ஒரு பொருள் குழப்பமான நிலையை அடைவதற்குமுன்பே அதனைச் சரிசெய்துவிடு.

✤ சாதாரண மக்கள் வெற்றியின் எல்லைக்கோடு வரை சென்று தமது செயலில் எப்போதும் தோல்வி அடைவார்கள்.

✤ துவக்கும்போது எப்படி கவனமாய்ப் பாதுகாப்பாயோ அவ்வாறே கடைசிவரையிலும் காத்திடு.

✤ இனி உனக்கு எந்தத் தோல்வியும் இல்லை.

இயல் : 65

✤ ஆதியில் தாவோ பயிற்சி செய்பவர்கள், மக்கள் ஞானமடைய வேண்டும் என்பதற்காகப் பயன்படுத்தியதில்லை.

✤ ஆனால் அவர்கள் எளிமையைப் (கபடமற்ற நிலை) பின்பற்ற வேண்டும் என்பதற்காகப் பயன்படுத்தினார்கள்.

✤ மக்கள் அறிவை உயர்த்தி ஒரு நாட்டை ஆளும் போது, அது அந்த நாட்டை அழிவில் கொண்டுபோய்த் தான் சேர்க்கும்.

✤ பாமர அறிவு குறைந்து ஒரு நாட்டை ஆளும்போது அது அந்த நாட்டைப் புனிதமாக்கும்.

✤ இந்த இரண்டில் எது தரமானது என்று அறியப்படும்.

✤ தரத்தை அறிந்து காக்கும்போது உயர்ந்த ஒழுங்கு நிலவும். உயர்ந்த ஒழுங்கு எல்லையற்ற அழகும் அகலமும் கொண்டது. இதில் அனைத்துப் பொருள்களும் திரும்ப வந்து அடைகின்றன.

✤ இவ்வாறாகப் பூரண அமைதியை அடையும்.

இயல் : 66

✤ தாவோ உலகமாகத் தோன்றுவது, ஆறு கடலுக்குள் நீரோட்டமும் பள்ளத்தாக்கும் வருவதைப் போன்றது.

✤ ஆறு, கடல் எல்லாம், பள்ளத்தாக்குகளுக்கு அரசர்கள் என்று கூறலாம். ஏனெனில் ஆறுகளும் கடல்களும் பள்ளத்தாக்குகளைவிடத் தாழ்ந்துதானே உள்ளன.

✤ இதனால் இவை பள்ளத்தாக்குகளுக்கு அரசர்களாக மாறுகின்றன.

✤ ஞானிகள் மற்றவர்களைவிடச் சொற்களைப் பணிவாகக் கையாள்வதால் அவர்கள் மக்களைவிட மேம்பட்டவர்கள்.

ஞானிகள் தனியராக மக்களுக்குப் பின்நின்று இருக்க முயல்வதால் அவர்கள் மக்களை முன்னோக்கி நடத்த முடிகிறது. இவ்வாறாக ஞானி உயர்ந்த நிலையில் இருக்கும்போது மக்கள் இவனை ஒரு சுமையாக உணரமாட்டார்கள். அவன் முன்னோக்கி நடக்கும்போது, மக்கள் அவனை ஒரு தலையீடாக உணரமாட்டார்கள்.

இவனது உயர்ந்த மதிப்பீட்டினால் அவைகள் உலகங்கள் சோர்வடைவதில்லை; அவன் எதனுடனும் போட்டியிடாமல் இருப்பதால் எதுவுமே அவனிடம் போட்டியிடுவதில்லை.

இயல் : 67

✤ உலகனைத்தும் கூறின் உயர்ந்தது என்றால் அது தாவோ ஒன்றே. அது எந்த ஒப்புமையும் அற்றது. அதனை ஒப்புமை செய்யும்போது அது சுருக்கமடையும்.

✤ நான் மூன்று பொக்கிஷங்களை வைத்துக் காக்கிறேன்.

✤ முதலாவது அன்பு, இரண்டாவது சமநிலை; மூன்றாவது துணிகரம் செய்து இவ்வுலகத்தை விட்டு மிஞ்சாமல் இருப்பது என்பதுதான்.

✤ ஒரு வீரனால்தான் அன்பாக இருக்கமுடியும்.

✤ நிம்மதி உடையவனால் சமநிலையில் இருக்கமுடியும்.

✤ முழுதும் அறிந்த ஒன்று உயர்அதிகாரியாக இருக்கும்போது துணிகரச்செயல் செய்து இவ்வுலகத்தைவிட்டு மிஞ்சாமல் இருக்கும்.

✤ அன்பற்றவீரம், சமநிலையற்ற குவியல், பின்னிருப்பதற்கும் பதிலாக முன்னிருப்பது இதுபோன்றவை எல்லாம் வேறு ஒன்று இல்லை; இறப்பிற்குத்தான் அழைத்துச் செல்லும்.

✤ எனவே ஒருவன் அன்பிற்காகப் போரிடும்போது வெற்றி அடைகிறான். அவன் அன்பிற்காக எதிர்த்து நிற்கும்போது அவன் பாதுகாப்படைகிறான்.

✤ வானகம் அவனைக் காக்கிறது. அன்புடன் அவனைப் பாதுகாக்கிறது.

இயல் : 68

✤ சிறந்த வீரன், வீரனைப் போன்று தோன்றமாட்டான்.

✤ சிறந்த போராளி, கொடியவனாகத் தோன்றமாட்டான்.

✤ சிறந்த வெற்றி கொண்டோன் போரில் பங்கு கொள்வது இல்லை.

✤ சிறந்த முதலாளி மற்றவர்கள் முன் பணிந்தே நடப்பான்.

✤ இதுவே போராட்டமற்ற நல்ஒழுங்கு எனப்படும்.

✤ இதுவே மனிதனின் திறமை எனப்படும்.

✤ இதுவே வானகத்திற்கு இசைந்த உயர்ந்த ஒழுங்கு எனப்படும்.

இயல் : 69

✤ ஒரு பண்டைய அறிவுக் கோமாளியின் கூற்று.

✤ நான் எப்போதும் விருந்தளிப்பவன் போன்று இல்லாமல் விருந்தினனாகவே செயல்படுவேன்.

✤ நான் ஓர் அங்குலம் முன்னோக்கி நகராமல் ஓர் அடி பின்னோக்கியே இருப்பேன்.

✤ இதன் உட்பொருள் என்னவெனில் எந்தப் பட்டங்களும் இல்லாதவிடத்து ஒருவனுக்கு இராணுவ மார்ஷல் பட்டம் கிடையாது என்பதுதான்.

✤ கையில்லாதவன் சட்டையை மடித்துவிடாதபடி அணிந்திருப்பது போன்று அவன் உடை அணிந்திருப்பான்.

✤ அவன் போர்க்கருவி அற்றவன். எதனையும் முற்றுகையிடாமல் இருப்பது போன்று இருப்பான்.

✤ அவன் எதிரி அற்றவன். சண்டை அற்று இருப்பது போல் இருப்பான்.

✤ எதிரியைக் குறைத்து மதிப்பிடுவது மற்ற எல்லாப் பேரழிவுகளையும்விட மிகவும் மோசமானது.

✤ எதிரியைக் குறைத்து மதிப்பிடுவது என்பது ஒரு புள்ளியில் நமது கருவூலத்தை (அன்பு) இழந்துவிடுதல் என்பதாகிறது.

✤ எனவே எதிர்எதிர்ப் படைகள் களத்தில் சந்திக்கும் போது கருணை அதனை வென்றுவிடும்.

இயல் : 70

✤ சொற்கள் நமது மூதாதையர்களைக் கொண்டது.

✤ செயல்கள் ஓர் ஆளுநரைக் கொண்டது.

✤ எனது சொற்கள் அறிவதற்கும் பழக்கப்படுத்துவதற்கும் மிகவும் எளிதானது.

✤ ஆயினும் இவ்வுலகத்தில் உள்ள யாவரும் இதனை அறிந்தவரும் இல்லை பழக்கப்படுத்தியவரும் இல்லை.

✤ ஏனெனில் அவர்கள் வைத்துள்ள அறிவு என்னை அறியப் பயன்படும்படி இல்லாமல் உள்ளது என்பதுதான்.

✤ அவர்களில் சிலர் என்னை அறியும்போது, முடிவில் நான் புகழின் எல்லையைக் கடந்துவிடுகிறேன்,

✤ எனவே ஞானி அணிவதெல்லாம் கரடுமுரடான ஆடைகள்தாம். ஆனால் அவன் தனது உள்ளத்தில் கொண்டிருப்பதோ மாணிக்கக் கற்களைத்தான்.

✤ அவன் தன்னை அறிந்தவன். ஆனால் அதை வெளியில் தெரிவிக்காதவன்.

✤ அவன் தன்னை நேசிப்பவன். ஆனால் அவன் தன்னைப் பற்றி உயர்வாக மதிப்பதில்லை.

✤ இவ்வாறாக அவன் பின் வந்ததைத் தள்ளிவிட்டு முன் தோன்றியதை எடுத்துக்கொள்கிறான்.

இயல் : 71

✤ இன்னும் இதனை அறியவில்லை என்ற திறந்த மனதுடன் ஒன்றை அறிய முற்படுவது சிறந்தது.

✤ முன்பே இது தெரிந்தது, அது தெரியாதது என்ற சிந்தனையுடன் ஒன்றை அறிய முற்படுவது நோய்.

✤ குவிந்த எண்ணங்கொண்ட மனத்தை நடுநிலைப்படுத்துவதாகவும், ஏற்கெனவே மனதில் நிரம்பி வழியும் கருத்துக்களின் அமைப்பினாலும் உண்டாவதே இந்நோய்.

✤ ஞானி இதனை நன்கு அறிவதால், இந்நோய்க்கு உள்ளாகமாட்டான்.

இயல் : 72

✤ பெரும் பயம் வரும்வரை மக்கள் ஆளுவோரைக் கண்டு பயப்படவே மாட்டார்கள்.

✤ அவர்களது இல்லங்கள் மிகவும் குறுகலாக இல்லாதிருக்க உறுதி செய்யுங்கள்.

✤ அவர்கள் பற்றாக்குறையாக வாழமாறுவிட்டுவிடாதீர்.

✤ அவர்கள் இல்லங்கள் அகலமாக விரிந்து பரந்து இருக்கும்போது மட்டுமே அவர்களது அதிருப்தி முடிவுக்கு வந்துவிடும்.

இயல் : 73

✤ துணிந்து வீரத்தை வெளியில் காண்பிப்பவன் அழிவான்.

✤ துணிந்து வீரத்தை வெளியில் காண்பிக்காதவன் வாழ்வான்.

✤ இவ்விரண்டையும் பிரித்துப்பார்த்தால் ஒன்று நன்மையளிக்கக் கூடியது; மற்றது தீமையளிக்கக் கூடியது.

✤ இதில் ஒன்றை வானகம் வெறுக்கக்கூடியது என்று யார் சொல்வது?

✤ வென்றதையே வெல்லக்கூடிய வானக தாவோ (இயற்கை) பகைமை அற்றது.

✤ இது பேசாது, ஆனால் உறுதியாகப் பதில் அளிக்கும்.

✤ இது எதனையும் அழைக்காமலேயே அவை தாமாகவே இதனை நோக்கி வருகின்றன.

✤ இது அமைதியாக இருந்தாலும் திட்டத்தில் செயல்படக் கூடியது.

✤ வானக வலைப்பின்னல் பரந்துபட்டது. அதன் வலைத் துவாரம் அகலமானது.

✤ ஆனால் அதிலிருந்து எதுவுமே தப்புவதில்லை.

இயல் : 74

✤ மனிதர்கள் சாவைக் கண்டு பயப்படவில்லை யெனில் அவர்களை அச்சப்படச் செய்யும் மரணதண்டனையால் என்ன பயன்? மனிதர்கள் மரணத்தைக் கண்டு நிலையாக பயப்படவேண்டும் என்பதற்காக கொடும்குற்றம் புரிந்தவர்களைக் கைது செய்து மரண தண்டனையை நிறைவேற்றுகிறோம். இல்லாவிட்டால் யார் இதனைச் செய்வது? யாவற்றிற்கும் மேலான ஒரு கொலையாளிதான் இதைச் செய்வான். அவன் உயர்ந்ததைப் படைக்கும் சிற்பிக்குப் பதிலாக, உயர்ந்த கொலையாளி இடத்தில் இருந்து கொண்டு, துண்டு

துண்டாக வெட்டிக் கொலை செய்கிறான். இப்போது உயர்ந்ததைப் படைக்கும் சிற்பியில் இருந்து கொண்டு ஒருவன் துண்டுதுண்டாக வெட்டியெடுப்பதால், மற்றவன் (மனிதன்) கஷ்டப்பட்டுத் தனது கையைத் தானே வெட்டிக்கொள்வது தவிர்க்கப்படுகிறது.

(மரண தண்டனை இல்லை. இயற்கை இதனை அளிக்கிறது.)

இயல் : 75

✤ மக்கள் பட்டினி கிடக்கிறார்கள். ஏனெனில் அதிகாரிகள் மக்களிடமிருந்து அதிக வரியை வசூல் செய்கிறார்கள். ஆம், மக்கள் பட்டினி கிடக்கிறார்கள். ஆட்சியில் துன்பப்படுகிறார்கள், ஏனெனில் அதிகாரிகள் மக்களது வாழ்வில் தலையிடுகிறார்கள். ஆம், மக்கள் துன்பப்படுகிறார்கள். மக்கள் சாவைக்குறித்துக் கவனிக்கத் தேவையில்லை; ஏனெனில் அவர்கள் வாழ்வதற்கே கஷ்டப்பட்டு முயற்சி செய்கிறார்கள். எனவே அவர்கள் சாவைக்கண்டு அஞ்சவேண்டியதில்லை!

இயல் : 76

✤ வாழும் மனிதன் மென்மையாகவும் அன்புடனும் இருப்பான். மனிதன் இறந்தபின் விரைத்துக் கடினமாகிறான். எல்லா விலங்குகளும் தாவரங்களும் வாழும்போது நெகிழ்ச்சியுடனும் எளிமையாகவும் வாழ்கின்றன. அவை இறந்துவிடும்போது சுருங்கி உலர்ந்துவிடுகின்றன. இது கூறுவது என்னவெனில், விரைப்பும் கடினமும் இறப்பின் பகுதி என்பதும், மென்மையும் அன்பும் வாழ்வின் பகுதி என்பதும்தான்.

போர்வீரர்கள் அதிக விறைப்புத்தன்மை அடைவதால் அவர்கள் நீண்டகாலம் வாழ்வதில்லை. மரம் அதிக விறைப்புத்தன்மை அடையும்போது முறிந்துவிடுகின்றது. உயர்ந்த வலிமையும் உயர்ந்த பதவிகளும் தாழ்ந்துவிடுகின்றன. எளிமையும் அன்பும் உயர்ந்துவிடுகின்றன.

இயல் : 77

✤ வரையப்பட்ட வில் போன்று வானகத்தின் தாவோ இல்லையா? உயர்ந்த பகுதியிலிருந்து எடுத்து தாழ்ந்த பகுதிக்கு உயர்த்துகிறது. குவிந்ததைக் குறைக்கிறது. குழிந்ததை நிரப்புகிறது. வானக தாவோ நிறைந்தவற்றிலிருந்து எடுத்து குறைந்தவற்றிற்குக் கொடுக்கிறது. ஆனால் மனிதன் வழி இதற்கு எதிரானது. அவன் குறைந்தவர்களிடமிருந்து எடுத்து நிறைந்தவர்களுக்குக் கொடுக்கிறான். யார்தான் அதிகமானவற்றிலிருந்து எடுத்துக்குறைவானவற்றிற்கு கொடுப்பது? அது தாவோவால் (இயற்கை) மட்டுமே

முடியும். ஏனெனில் ஞானி எதனையும் மறைத்து ஒளிப்பதில்லை. அதிகமாக மற்றவர்களுக்கு உதவுவதால் அவனே பல நன்மைகளை அடைகிறான். மற்றவர்களுக்கு அதிகம் கொடுப்பதால் அவன் பலவற்றைப் பெறுகிறான்.

✤ வானக தாவோ நல்லதே செய்யும் ஆனால் எதற்கும் தீங்கு செய்யாது. தாவோவில் ஞானி செயல்படுகிறான். அவன் எதனிடமும் வேறுபாடு பார்ப்பதில்லை.

இயல் : 78

✤ இந்த உலகத்திலேயே எளிமையான பொருள் இந்த உலகத்திலேயே வலிமையான பொருளைத் தோற்கடித்துவிடும். தண்ணீரை அதனது எளிய தன்மையாலும் உலகத்தின் வேறு எதனுடனும் ஒப்பிடமுடியாது. கடினமானவைகளைக்கூட இது தாக்கும்; இதற்கு இணை வேறு எதுவும் கிடையாது.

✤ எளிமை பலமானதையும், வளைந்து கொடுக்கும் தன்மை கடினமானதையும் தோற்கடித்துவிடும்.

✤ இதனை உலகத்திலுள்ள அனைவரும் அறிந்திருந்தாலும் இதனை யாரும் பழக்கப்படுத்துவது இல்லை.

✤ எனவே ஞானி கூறுகிறார் அவன் இந்த நாட்டின் துன்ப துயரங்களைத் தாங்குவதால் அவன் இந்த நிலத்திற்கே தலைவனாக இருக்கிறான்.

✤ அவன் இந்த நாட்டின் பேரழிவைத் தாங்குபவனாக இருப்பதால் அவன் இந்த உலகத்திற்கே அரசனாகிறான்.

✤ முரண்பட்டதுபோல் இருந்தாலும் இவை உண்மையின் சொற்கள்.

இயல் : 79

✤ கடும் வெறுப்பிலிருந்து அன்பிற்குத் திரும்புங்கள்; இல்லாவிட்டால் கடும் வெறுப்பே ஒத்துப் போய்விடும். அவற்றின் சில பகுதிகள் எப்போதும் இதில் தங்கிவிடும்.

✤ இதை எப்படித்தான் நல்லதாக மாற்ற முடியும்? ஞானி தனது இடதுபாகத்தின் ஒழுங்கை (இடதுபாகத்தில் இதயம் உள்ளது. இதயம் அன்பின் அறிகுறி) சரியாவே வைத்துள்ளார் ஆனால் மற்றவர் அவ்வாறு வைக்கவில்லை.

✤ நல் ஒழுங்கு ஒத்து அமைகிறது. ஒழுங்கற்றது கட்டாயப்படுத்தப்பட்டு ஒன்று சேர்க்கப்படுகிறது. வானகத்தின் தாவோ (இயற்கை) எந்த வேறுபாட்டையும் காண்பிக்காது அது எப்போதும் நல்லவர்களையே தொடர்கிறது.

இயல் : 80

- ஒரு சிறிய நாட்டில் குறைந்த மக்கள் இருப்பதாகக் கொண்டால்,
- நான் பலவிதமான பாத்திரங்களை வைத்திருந்தாலும் அதனைப் பயன்படுத்த மாட்டேன்.
- இறப்பு என்பது மனம் ஆழ்ந்த ஒரு முக்கிய செய்தி. இதனைவிட்டு அதிக தொலைவு செல்ல வேண்டியதில்லை என்று நான் மக்களுக்கு உணர்த்துவேன்.
- அவர்கள் படகுகளையும் வாகனங்களையும் வைத்திருந்தாலும் அதில் ஏறி அவர்கள் பயணிக்க மாட்டார்கள்.
- அவர்கள் கவசங்களையும் போர்த் தளவாடங்களையும் வைத்திருந்தாலும், அது வெளியில் தெரியாது.
- முடிச்சுப் போடப்பட்ட கயிறுகளைத் திரும்பப் பயன்படுத்துமாறு அனுமதிப்பேன் (எழுதிக்கொண்டிருப்பதற்குப் பதிலாக).
- அவர்களது உணவில் அவர்கள் திருப்தியடைவார்கள்.
- அவர்களது உடைகளில் அவர்கள் மகிழ்வார்கள்.

- தங்களது இல்லங்களில் சொகுசாக இருப்பார்கள். தங்களது பண்பாட்டில் மகிழ்வார்கள்.
- தங்களது அண்டை நாடு தங்களது கண்ணுக்கு எட்டிய தொலைவில் இருந்தாலும், சேவலின் குரலுக்கும், நாயின்குரைப்புக்கும் கேட்கும்தொலைவில்தான் இருக்கும். இந்தச் சிறிய நாட்டில் உள்ளவர்கள் அண்டை நாட்டிற்குத் தங்கள் உயிர் உள்ளவரை போகவே மாட்டார்கள்.

இயல் : 81

- தெரிந்தவன் பேசிக் கொண்டிருக்கமாட்டான். அறியாதவன் பேசிக் கொண்டிருப்பான்.

உண்மையானவன் தன்னை வெளியில் காண்பிக்கமாட்டான். வெளியில் காண்பிப்பவன் உண்மையானவன் அல்ல.

ஒழுங்கானவனிடம் தொல்லைகள் இருக்காது சச்சரவானவன் ஒழுங்கானவன் அல்ல கற்றவனெல்லாம் ஞானி அல்ல. ஞானிஎல்லாம் கற்றவன் அல்ல. எனவே ஞானி தனது மதிப்பை வெளியில் காண்பித்துக் கொண்டிருக்கமாட்டான்.